விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை (21.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

ரா
ம்
கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

### கடற்படை ரோந்து பணிக்காக
## இரு கப்பல்களை இந்தியா இலங்கைக்காக உருவாக்குகிறது

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்காக இரண்டு கப்பல்களை இந்தியா கட்டி வருவதாக இந்திய பாதுகாப்பு துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள இந்தியா, இதுவரை மிக அரிதாகத்தான் ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது.

தற்போது முதல் முறையாக போர்க கப்பல் ஒன்றை வெளிநாடு ஒன்றுக்கு இப்போது ஏற்றுமதி செய்துள்ளது.

கொல்கத்தாவில் உள்ள அரசுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க....

## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பகுதியில் பற்றைக்குள் எரிந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலத்தை நேற்று மானிப்பாய் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற அவர்கள் சடலத்தை மீட்டுள்ளனர்.

கடந்த 10 நாட்களாக காணாமற போன மானிப்பாய் கட்டுடையை சேர்ந்த ஐ.ஐ.வைத்தியவர்மன் (வயது

20 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் நாடுகளே என்னை ஜெனிவாவில் காப்பாற்றுகின்றன
### காத்தான்குடியில் மகிந்த உரை

(கொழும்பு)



வசதி படைத்த முஸ்லிம்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஹஜ் கடமையை நிறைவு செய்கின்றனர். வறிய மக்களுக்கு அந்த வாயப்பு ஒரு தடவை கூட இல்லாமல் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜ

19 ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்கா, இந்தியா தேர்தலில் அக்கறை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்துமாறு அமெரிக்காவும் இந்தியாவும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலுக்கான சூழலை இல்லாமல் செய்யாது அதனை பாதுகாக்க உரிய முனைப்புகளை மேற்கொள்

20 ஆம் பக்கம் பார்க்க....

# பொது எதிரணியினரின் கூட்டத்தில் தாக்குதல்

## 4 பேர் படுகாயம், தேர்தல் வன்முறை 280

(கொழும்பு)

*ஹப்புத்தளையில் பொது எதிரணியினர் நேற்றையதினம் நடத்திய கூட்டத்துக்கு சென்ற ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதன்போது 4 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

மேலும் இத்தாக்குதலின் போது, வாகனங்களும்சேதமடைந்துள்ளன.

கூட்டத்துக்காக கட்டப்பட்டிருந்த ஒலிப்பெருக்கிகளுக்கான வயர்களை வெட்டியவர்கள் மீது ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் கல்லெறிந்துள்ளனர்.

இதனையடுத்தே அத்தரப்பினரும் ஐ.தே.க ஆதரவாளர்கள் மீதுதாக்குதல் நடத்தியுள்ளனர்.

வயர்களை வெட்டியவர்களும் தமது ஆதரவாளர்கள் மீதுதாக்குதலை மேற்கொண்டவர்களும் ஊவா மாகாண முதலமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் என்று ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஹரின் பெர்ணான்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## பாரதிராஜா யாழ் வருகை




(கொழும்பு)

தென்னிந்தியாவைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் பாரதிராஜா யாழ்ப்பாணத்துக்கு நேற்று சனிக்கிழமை வருகைதந்தார். இவருக்கான வரவேற்பு நிகழ்வு யாழ்.நக

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுதமுனையில் அச்சுறுத்தி முகமூடி அணிந்து கொள்ளை
### யாழ்.பிறவுண் வீதியில் சம்பவம்



முகமூடி அணிந்த கொள்ளையர்கள் குழு ஆயுத முனையில் கொள்ளைச் சம்பவம் ஒன்றினை நடத்தியுள்ளது.

இச் சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் யாழ்.பிறவுண் வீதி, நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீட்டுடன் கூடிய அழகுசாதன நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் ஒரு பவுண் சங்கிலி, 7 கைத்தொலைபேசிகள், ஒரு மடிக்கணனி மற்றும் டப் ஆகியவற்றினை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறிப்பிட்ட அழகுசாதன நிலையத்தில் ஒரு நபரின் பெயரைத் தெரிவித்தபடி இருவர் இரவு 9.30 மணியளவில் உரிமையாளரை அழைத்துள்ளனர். உரிமையாளர் வெளியே வர முற்பட்ட வேளை மூன்று பக்க

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனவரி 8 ஆம் திகதி வன்முறை அச்சம்

(கொழும்பு)

ஜனவரி எட்டாம் திகதி மிக மோசமான வன்முறைகள் இடம்பெறலாம் என அச்சம்கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி, அதிலிருந்து தனது உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை பாதுகாப்பதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க....

### வன்முறையை கட்டுப்படுத்த விசேட பொலிஸ்
## யாழில் வாக்களிக்க 450,132 பேர் தகுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் வடக்கிலும் சூடு பிடித்திருக்கின்ற நிலையில் இதன் போதான தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இம்முறை பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவீந்திர வைத்தியலங்கார தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களிலும பாதுகாப்பு பலப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாவட்டத்தில் நீதியான நியாயமான தேர்தல் நடைபெறுவதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் இதற்கமையவே பொலிஸாரின் செயற்பாடுகள் அமையும் என்றும் தேர்தல் முன்னேற்பாடு தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் குறித்த முன்னேற்பாடுகள் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD

உங்கள் கீண்களுக்கு விருந்தளிக்க 40% வரை மின்சார சேமிப்புடன் கூடிய
LED,3D LED
தொலைக்காட்சி பெட்டிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!



- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்திரவாதம்
- பண்டமாற்று கொடுப்பனவு
- விசேட பரிசுப்பொருட்கள்

இல-10பி,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

(தி-9149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THADSHA** BEAUTY PARLOUR
**NEERGI** BEAUTY PARLOUR
**RAAM** BEAUTY CENTER
**FASHION** BEAUTY CORNER

இணைந்து நடத்தும்




இடம் : வீரசிங்கம் மண்டபம்
திகதி : இன்று (21.12.2014)
ஞாயிற்றுக்கிழமை



THE BRIDAL SHOW
(மணப் பெண்களின் அலங்கரிப்பு காட்சி)
இடம்பெறும்


## பெண்களுக்கான நடவடிக்கை

நாட்டின் பெரும்பான்மை பிரஜைகளான பெண்களின பிரச்சினைகளுக்கு தீர்வு காண மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின கீழ் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக எதிர்வரும் பெப்ரவரி மாதம் விசேட பெணகள் மாநாடு நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

100 நாள்வேலைதிட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்த மாநாட்டில், பெண்கள் சம்பந்தமான யோசனைகள் கொண்டுவரப்படும் என்று ரணில் தெரிவித்தார். (செ-11)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உருப்படிவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER



கலாபூஷண விருது பெற்றமைக்காக
பாராட்டி வாழ்த்துகின்றோம்



தர்மலிங்கம் செல்வராசா

அல்வாயூர் நக்கீரன் நாடகமன்ற முற்பெரும் நடிகரும் புதுக்குடியிருப்பு மந்துவில் கவிதாலயா நாடகமன்ற தலைவரும், இயக்குநரும், சமூக நாடகங்கள், புராண நாடகங்கள், மேடைப்பாடல்கள், இசை நாடகங்கள் அனைத்திலும் திறமை பெற்று அண்மையில் கலாபூஷண விருது பெற்று எமது மண்ணிற்கு பெருமை தேடித்தந்த திரு.தர்மலிங்கம் செல்வராசா அவர்களை தொடர்ந்து கலைப்பணியில் பணியாற்றி வளர வேண்டுமென வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

(8818) கவிதாலய நாடகமன்ற கலைஞர்கள்



NEW SCIENCE WORLD
Navalar Road - Brown road Junction, Jaffna.
Web : www.physicsocean.com
E-mail : info@physicsocean.com
Telephone : 077 336 4055

G.C.E(A/L) 2017 SCIENCE STREAM

தமிழ்மொழி மூலம்

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன்<br>திரு. R. குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ்<br>திரு. T. சிவகுமார் |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன்<br>திரு. V. உமாசங்கர்<br>(கொழும்பு முன்னணி உயிரியல் ஆசிரியர்) |

English Medium

| | |
|---|---|
| Physics | Mr. R.Kumaran |
| Chemistry | Mr. Dias |
| Biology | Mr. V. Umashanger<br>(Leading Biology Teacher- Colombo) |

ஆரம்பம் :- 23.12.2014 செவ்வாய் காலை 07.00மணி
அனைத்து மாணவர்களும் அனுமதிகளை 22.12.2014 திங்கள் காலை 07.00மணி முதல் பெற்றுக்கொள்ளவும்.

(C-9440)



மருந்தாளர் தேர்வுப் பரீட்சை (வெளிவாரி)

PHARMACIST'S EXAMINATION (External)

(Conducted by CMCC, Medical Faculty, University of Colombo)

மேற்படி பரீட்சை கடைசியாக 14.12.2013 இல் கொழும்பில் நடைபெற்றது. வட பகுதியைச் சேர்ந்த 69 விண்ணப்பதாரிகள் உட்பட இலங்கை முழுவதிலுமாக 1500 பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களில் 505 பேர் மருந்தாளர்களாகச் சித்தியடைந்துள்ளதாக அவர்களின் பெயர்களை 15.12.2014 இல் கொழும்பு மருத்துவபீடம் அறிவித்துள்ளது. இவர்களில் யாழ்ப்பாணக் கல்லூரியில் (Jaffna College) பயின்ற 42 பரீட்சார்த்திகள் அடங்குகின்றார்கள்.

இந்த வருடத்திற்கான (2014) பரீட்சை போதிய கால அவகாசம் இல்லாமையால் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள் **மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப் படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது **077625 6292** தொலைபேசி மூலமாகவோ மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம். (8821)



வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, இலங்கை.

செய்முறைப் பரீட்சை

கலைமாணித் தேர்வு - பகுதி - II - 2011 (வெளிவாரி)
நாடகமும் அரங்கக் கலைகளும் (EX.DTAG.3.2)

மேற்படி கலைமாணித் தேர்வின், நாடகமும் அரங்கக்கலைகளும் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சையை 30.12.2014 (செவ்வாய்க் கிழமை) மதியம் 1.00 மணி தொடக்கம் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேர அட்டவணை என்பன ஏற்கெனவே பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர் (சி-9432) 18.12.2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ் சங்கம் அமைச்சருக்கு மகஜர்

காரைநகர் தனியார் மினிபஸ் நடத்துநருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை நடத்துனருக்கும் இடையே இடம்பெற்ற வாக்குவாதம் தொடர்பாக காரைநகர் தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரில் யாழிலிருந்து புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை பஸ் தனியார் மினி பஸ்ஸை முந்திச் செல்ல விடாமல் தடையை ஏற்படுத்தியதாகவும் இது தொடர்பாக தனியார் மினிபஸ் நடத்துனர் பஸ் நடத்துனரிடம் கேட்ட போது வாக்குவாதம் ஏற்பட்டதுடன் சம்பவத்தைத் தொடர்ந்து மேலும் 3 பேர் காரைநகர் வாரிவளவு பிள்ளையார் கோவிலடியில் சாரதியை தாக்க முற்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். (இ

# ஜனாதிபதி மகிந்த தோல்வியடைவார்

## சுதந்திரக்கட்சியினரே வாக்களிக்கமாட்டார்களாம்



பண்டாரநாயக்கவின் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர்தற்போதுஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுகு வாக்களிப்பதில்லை என தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்முழுமையான வாக்குகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்க போவதில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த ஒரு பகுதியினர் பிரிந்து சென்று விட்டனர். அந்த கட்சியில் இருக்கும் சிலருக்கு வாக்குரிமை கூட இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகல வாக்குகளும் கிடைக்கும் என எண்ணினால் மகிந்த வெற்றிபெற மாட்டார். அந்த கட்சியின் வாக்குகள் பிரிந்து விட்டன.

விமல் வீரவன்ஸவுக்கும் வாக்குகள் இல்லை. டியூ. குணசேகர. மகிந்த ராஜபக்சவின் புண்ணியத்தில் கிடைத்த தேசிய பட்டியல் நாடாளுமன்ற பதவி பெற்றார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் திஸ்ஸ விதாரணவும் தேசிய பட்டியல் மூலமே நாடாளுமன்றத்திற்கு வந்தார்.

தினேஷ் குணவர்தனவை எடுத்துக்கொண்டால், எந்த விதத்திலும் தேசிய ரீதியில் அவருக்கு வாக்கு வங்கி என்பது இல்லை. மகரகம தொகுதி ஒரு காலத்தில் அவருக்கு வாக்கு வங்கி இருந்தது. வாசுதேவ நாணயக்கார பற்றி பேசி பிரயோசனமில்லை. முஸ்லிம் மக்களின் வாக்குகளும் மகிந்த ராஜபக்சவுக்கு கிடைக்காது. மேல்.தென் மாகாண சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட சகல முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வியடைந்தனர்.

ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தில் இருப்பதால், அவர் செல்வாக்கை இழப்பாரே தவிர முஸ்லிம் மக்கள் அவருக்காக மகிந்தவுக்கு வாக்களிக்க போவதில்லை. இதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார். (இ-5)

## வடக்கு மாகாண ஆசிரியர் சங்கத்தின் நூற்றாண்டு விழா திங்களன்று யாழில்

இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்த வட மாகாண ஆசிரியர் சங்கத்தின் நூற்றாண்டு விழா நாளை திங்கட்கிழமை யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் மு.ப 9.30 மணிக்கு இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்டப் பிரதி நிதி ஆ.தீபன் திலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராளன் நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது. இந்நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நிகழ்த்துவார். சமகாலத்தில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எனும் தலைப்பில் பேராசிரியர்மா.சின்னத்தம்பியும் ஆயுத மோதல் முடிவுக்கு வந்த பின்னரான சூழலில் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதில் தொழிற்சங்கங்களின் பங்கு எனும் தலைப்பில் நிலாந்தனும் வட மாகான ஆசிரியர் சங்க செயற்பாடுகள் எனும் தலைப்பில் சங்கத்தின் முன்னாள் செயலாளர் வே. சிவராசாவும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (இ

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



ஆவரங்கால் மத்தியைச் சேர்ந்த சிவசம்பு சிவகுமார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம்செய்துகொண்டுள்ளார்.

காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தில் சிரேஷ்ட அஞ்சல் உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் ஆவரங்கால்கிழக்கு ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பரிபாலன சபையின் பொருளாளருமாவார். (இ-134)

# ஆதார வைத்தியசாலையினை தரமுயர்த்துமாறு கோரிக்கை

யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து மக்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை வழங்கிக் கொண்டிருப்பதால் வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், மருத்துவ ஆயவுகூட தொலில்நுட்பவிய லாளர், சிற்றூழியர்கள் என பல்வேறுபட்ட ஆளணி பற்றாக் குறையை எதிர்நோக்குகின்றது. வடமாகாண த்திலேயே புற்று நோய் சிகிச்சைப் பிரிவு, உளநலச் சிகிச்சைப் பிரிவு என்று இருபெரும் அலகுகளைக் கொண்டு இது காணப் படுவதால் எமது இந்த வைத்திய சாலையை பொது வைத்தியசாலை யாகத் தரமுயர்த்தவேண்டும் என வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கச் செயலாளருமான சி.ஹரிகரன் தீர்மானம் ஒன்றை முன வைத்தார். வலி. வடக்கு பிரதேச சபையின் டிசெம்பர் மாதத்துக்கான பொதுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை பிரதேசசபையின மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது. சபை அமர்வின்போதே அவர் மேற்கண்ட தீர்மானத்தை முன் வைத்தார். இந்தத் தீர்மா னத்தை உறுப்பினர்களான கதிர மலைப்பிள்ளை முன்மொழிய, மணி ராஜா வழி மொழிய சபையால ஏக மனதாக ஏற்றுக்கொள்ளபபட்டது.

எமது வலி.வடக்கு பிரதேசம் தற்போது துரிதகதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்ற ஒரு பிரதேசம். இங்கு சகல கட்டுமானங்களும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எமது இந்தப் பிரதேசத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அமைந்துள்ளமை எமது பிரதேசத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இல்லாத இருபெரும் அலகுகளான உளவளச் சிகிச்சைப் பிரிவும், புற்றுநோய் சிகிச்சைப் பிரிவும் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் காணப்படுகின்றன. புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான விடுதிகள் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஆரம்பத்தில் இருந்தாலும் தற்போது அவை அனைத்தும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுவிட்டன. அத்துடன், யாழ். பல்கலைக்கழகத்தின் உளநலச் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான விரிவுரைகள் அனைத்தும் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலேயே நடைபெற்று வருகின்றன.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நவீனமுறையில் மகரகமவுக்கு இணையாக உருவாக்கப்பட்டு வருகின்றது. இனிவரும் காலங்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த மக்கள் புற்றுநோய் மேலதிக சிகிச்சைக்காக மகரகமவுக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்படாது. வடமாகாணத்துக்கு வெளியே அனுராதபுரம், புத்தளம், சிலாபம் போன்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து புற்றுநோய் சிகிச்சை பெறுவதற்கான ஏதுநிலை நிச்சயம் உருவாகும்.

ஆகவே, ஆதார வைத்தியசாலையாகக் காணப்படும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து மக்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை வழங்கிக் கொண்டிருப்பதால் வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொலில்நுட்பவியலாளர், சிற்றூழியர்கள் என பல்வேறுபட்ட ஆளணி பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றது. வடமாகாணத்திலேயே புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநலச் சிகிச்சைப் பிரிவு என்று இருபெரும் அலகுகளைக் கொண்டு இது காணப்படுவதால் எமது இந்த வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்த வேண்டும் என்று இந்த அவையில் நான் தீர்மானத்தை முன்வைக்கின்றேன் என்றும் இதன் பிரதிகள் மேலதிக நடவடிக்கைக்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட மாகாண சுகாதார அமைச்சர், வடமாகாண முதலமைச்சர், மத்திய சுகாதார அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பப்படுதல் வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-78)

## திருவாசக முற்றோதல்

யாழ். கந்தர்மடம் சிவகுருநாத குருபீடத்தின் வேதாந்த மடத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் இந்நிகழ்வில்பங்குபற்றி பயனடையுமாறு குருபீடாதிபதி கேட்டுள்ளார். (இ

# இராசி பலன்

21.12.2014
(மார்கழி 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 9.06 மணிவரை
கேட்டை முன்னிரவு 9.34 மணிவரை
இராகுகாலம் 4.54-6.24 மணிவரை
சுபநேரம் 9.24-10.54 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மேடம்:** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், வேலைச்சுமை கூடும், உடல்நலனில் அதிக கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து தீர்ப்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் ஏற்படும்.

**சிம்மம்:** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், வாகன சுகமுண்டு.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும், தொலைபேசித் தகவல்கள் நன்மை தரும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்:** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு:** ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.


**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** அருமையான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.




**மீனம்:** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், தேக நலன் சீராகும், திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய திட்டங்கள் வெற்றி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலம்புரியின் 15ம் ஆண்டு நிறைவு விழா காட்சிகள்






மங்கல விளக்கேற்றல்







மங்கள இசை




வரவேற்பு நடனம்




உரைகள்














இந்.தாதுவரால் நூல்கள் கையளிப்பு



மூத்த ஊடகவியலாளர் கௌரவிப்பு



இசைக்கச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

### 20.12.2014

### ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி




ஒரு சமூகத்தின் நாடித்துடிப்பாக அதனுடைய உயிர்ப்பினை வெளிக்காட்டும் பணியில் வலம்புரியின் சேவை பாராட்டுக்குரியது. குறிப்பாக ஆசிரியர் பந்தி அனைவரையும் ஈர்க்கும் வகையில் நவரசத்துடன் இலக்கியப்பாத்திர உவமான உவமேயங்களோடு இடக்கரக்கல் செய்தியுடன் வெளிப்படுத்தி நிற்பது உள்ளங்கை நெல்லியக்கனியாகும்.

இவ்வாறான வலம்புரி நாளிதழ் தனது 15 ஆவது அகவையை கொண்டாடும் இத்தருணத்தில் அதற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நிறுவனத்தின் முகாமைக்கும் உழைக்கும் ஆசிரியர் குழாத்துக்கும் பெயரினை நிலைதாங்கி நிற்கும் ஊடகவியலாளர் அனைவருக்கும் பாராட்டுக்கள். இப்பணி தொடர வாழ்த்துக்கள்.

**இ. இளங்கோவன்,**
**ஆளுநரின் செயலாளர்,**
**வடமாகாணம்**

## வலம்புரி தொடர்ந்து சேவை புரிக!



கடந்த 15 வருடங்களாக தமிழ் சமூகத்திற்கு நடுவுநிலை தவறாமல் செய்திகளையும் கட்டுரைகளையும் கலையம்சங்களையும் வழங்கிக் கொண்டிருக்கும் எமது **வலம்புரிக்கு** எனது வாழ்த்துக்கள். **வலம்புரி** தொடர்ந்து என்றும் வெளிவந்து எல்லோருடைய கைகளிலும் தவழ வேண்டுமென்றும் வலம்புரி 16 ஆவது ஆண்டில் இனிதே பயணிக்கவும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரா. சந்திரசேகர சர்மா M.A**

## வாழ்க பல்லாண்டு...

வலம்புரியே வலம்புரியே
வாழ்க பல்லாண்டு
வளமுடனே உமை தழுவி
வையகத்தில் வாழ்த்துகின்றோம்
இவ்வாண்டில் பதினைந்தை நிறைவு செய்து
பதினாறில் கால் பதித்து பரப்பிடுவாய் நல்ல
பல செய்திகளை இனிவரும் காலமதில்
இன்னும் பல மெருகுடனே
நல்ல பல ஆக்கமுடன் எம் மத்தியில் சிறந்திடுவாய்
பதினைந்து ஆண்டதனில் தமிழர் பட்ட அவலங்களை
நாளதனில் அச்சமின்றி பரப்பி வந்த வலம்புரியே
பாரெங்கும் உள்ள மக்கள்
வலம்புரியே வாழ்கவென என்றென்றும்
வாழ்த்திடுவர் வாழ்க பல்லாண்டு

**சி. கிருஷ்ணமூர்த்தி,**
**அமைப்பாளர்,**
**அகில இலங்கைத் திருமுறை மன்றம்,**
**பதிவகக்காப்பாளர்,**
**யாழ். மாநகரசபை.**

# தமிழ் பேசும் மக்கள் தலைதூக்க வேண்டும்

## மனோ கணேசன் தெரிவிப்பு



**இந்த ஆட்சிக் கொடுமையில் இருந்து கொஞ்சமாவது மீணடும் தமிழ் பேசும் மக்கள் தலை தூக்க வேண்டும். இன்றைய இறுக்கமான சூழலில் இருந்து கொஞ்சமாவது மீள வேண்டும. துன்பப் படும் தமிழ் பேசும் மக்களின் கோணத்தில் இருந்து பார்த் தால் தான் இந்த உண்மைகள் புரியும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை நாடு முழுக்க வாழும் தமிழ் பேசும் மக்கள், ஜனவரி 8ஆம் திகதி காலை 7.00 மணிக்கும், 10.00 மணிக்கும் இடையில் வாக்களித்துவிட வேண்டும். தாமதம் வேண்டாம். மாலை 4.00 மணிவரை வாக்களிப்புக்கான வாய்ப்பு இருந்தாலும், நாம் நேரகாலத்துடன் வாக்களிப்பது நமது வீட்டுக்கும், நமது நாட்டுக்கும் நல்லது என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மாத்தளை நகரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பொது எதிரணி பிரசார கூட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இதற்கு இன்று எம்முன் இருக்கும் ஒரே வழி, அன்னப்பறவை சின்னத்துக்கு வாக்களித்து, இன்றைய ஆளும் கூட்டணியை தோற்கடிப்பதுதான். அதனாலேயே பல்வேறு விட்டுக்கொடுப்புகளுடன் இந்த கூட்டணியில் இன்று நாம் இருக்கின்றோம்.

எங்கள் அரசியல் சமூக வாழ்வில் ஆரம்பித்து, எம் சமூக பொருளாதார வாழ்விலும் கைவைக்க இவர்கள் ஆரம்பித்து விட்டார்கள். எமது நேர்மையான நியாயமான அரசியல் அபிலாஷகளை பிடுங்கினார்கள். நாம் என்ன தொழில் செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டு எம் பொருளாதாரத்தில் கைவைத்தார்கள். இப்படியே போனால் நாம், நாளை நாம் வழிபடுவதற்கும், தொழுவதற்கும், பிரார்த்திப்பதற்கும் இவர்களிடம் அனுமதி வாங்க வேண்டி வரும்.

எனவே தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நேற்று வாதப்பிரதிவாதங்கள் தேவையில்லை. தயக்கங்களுக்கு அவசியம் இல்லை. எமது வாக்கு முக்கியமானது. அதை பாதுகாப்பாக உரிய இடத்துக்கு கொண்டு சென்று சேர்ப்பது அதைவிட முக்கியமானது. இந்த காட்டாட்சியை விரட்ட அதை பயன்படுத்த வேண்டும்.

எனவேதான் ஜனவரி எட்டாம் திகதி காலை ஏழு மணிக்கும், பத்து மணிக்கும் இடையில் தமது வாக்களிப்பை நடத்தி முடித்துவிட வேணடும் என தமிழ், முஸ்லிம் மக்களை நான் கோருகிறேன்.

தாமதிக்காதீர்கள். எங்கள் தாமதம், தோல்வியில் துவண்டு கொண்டிருக்கும் இவர்களுக்கு சட்ட விரோத வாய்ப்புகளை தந்துவிடலாம். அதற்கு இடம் கொடுக்க வேண்டாம். (இ-5)

# புலம்பெயர்ந்துள்ள உறவுகள் உதவமுன்வந்தால் புலி தந்ததா? பூனை தந்ததா? என விசாரணை

## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விசனம்

வடக்கு மாகாண சபைக்கு புலம்பெயர் தமிழ் உறவுகள் உதவிகளை வழங்க முன்வந்தால் அவர்களை புலியா? பூனையா? என பாதுகாப்பு அமைச்சு விசாரணை செய்து அந்நிதியையும் தடுக்கின்றது என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டு விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய மாகாணங்களைவிட வடக்கு மாகாணத்திற்கு அதிக நிதி மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா பல புள்ளிவிபரங்களை முன்வைத்து பேசியிருந்தார்.

வடக்கு மாகாணத்தில் போரின் பின்னர் அதிகரித்த தேவை காணப்படுகின்றது. ஆகையினால் ஏனைய மாகாணங்களோடு வடக்கையும் ஒப்பிட்டு பார்க்க முடியாது.

எமக்கு மத்திய அரசு தராவிட்டாலும் எமது புலம்பெயர் உறவுகள் உதவி வழங்க தயாராகவுள்ளனர். ஆனால் அதற்கும் தடைபோடுகின்றனர்.

அண்மையில் சுவ சுகாதார அமைச்சுக்கு அவுஸ்திரேலிய புலம்பெயர் உறவுகள் உதவிகளை வழங்க முன்வருகின்ற போதிலும் யாருடைய பணம் என சோதனையிடுகின்றனர்.

அதனை புலி தந்ததா? பூனை தந்ததா? என வங்கிக் கணக்கினையும் பாதுகாப்பு அமைச்சினை சேர்ந்தோர் சோதனையிடுகின்றார்கள்.

ஆகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தேவையான அளவிற்கு பணம் தரப்படல் வேண்டுமென தெரிவித்தார். (இ-4)

# தேர்தல் பிரசாரத்திற்காக சல்மானை மகிந்த அரசாங்கம் அழைத்துள்ளது

## ஹரீன் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக இந்திய திரைப்பட நடிகர் சல்மான்கானை அரசாங்கம் அழைத்துள்ளதாக தெரிவித்துள்ள ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ கோடிக்கணக்கான நிதியை பிரசார நடவடிக்கைகளுக்கு ஒதுக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பாரியளவு வேலைவாய்ப்பு வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக் கின்றன. இலங்கையில் அரச சேவையாளர்கள் 13 இலட்சம் பேர் காணப்படுவதுடன் 80 இலட்சத்திற்கும் அதிகமானோர் தனியார் துறையில் காணப்படுகின்றனர்.

எவ்விதமான தொழில்வாய்ப்புக்களையும் ஏற்படுத்தாது குறிப்பிட்ட அரச சேவை வாய்ப்புக்களை பிரசாரப்படுத்தி வருகின்றனர். தற்போது வேலைவாய்ப்பு வழங்குவதாக கட்டாயப்படுத்தி இளைஞர் யுவதிகளை பிரசார நடவடிக்கைகளுக்கு அழைத்து வருகின்றனர். குறிப்பாக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள நீலப்படையில் இவ்வாறானவர்களே காணப்படுகின்றார்கள். அவர்களை பிரசாரத்திற்காக பயன்படுத்துகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அதிபர்களுடனான கலந்துரையாடல்

யாழ். வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்களுடனான மார்கழி மாதத்துக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் எனவும் சகல அரச, தனியார் பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# வட-கிழக்கு மைத்திரிக்கே ஆதரவு

## விக்ரமபாகு கருணாரட்ன நம்பிக்கை

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவையே ஆதரிக்கின்றார்கள் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் யாருக்கு கிடைக்கும் மகிந்தவிற்கா? அல்லது மைத்திரிக்கா என ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவிற்கு தெளிவாக வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதரவளிக்கின்றனர்.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேனவிற்காக வடக்கு கிழக்கில் பிரசாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ் கின்றனர.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது வடக்கு கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கு பூரண ஆதரவளிப்பார்கள் என்பதனை உறுதிபடக் கூற முடியும் என விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாருக்கு அரச வளங்களை தாரைவார்க்க எதிரணி திட்டமாம்

## ஜனாதிபதி மகிந்த குற்றச்சாட்டு

**இலங்கைக்கு உரித்தான முகாமைத்துவமே அவசியமானது. சிங்கப்பூர் முறைமையினைத் தவிர்த்து கொள்வதோடு தற்போதைய அரசாங்கத்தினால் கட்டியெழுப்பப்பட்ட அரச வளங்களை தனியொருவருக்கு பொது எதிரணி விற்பனை செய்ய சதித் திட்டம் தீட்டி வருவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**

சிங்கப்பூர் முறைமையினைத் தவிர்த்து, இலங்கைக்கு உரித்தான முகாமைத்துவமே நாட்டுக்கு அவசியம். திருகோணமலை சேருநுவர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தா. தற்போதைய அரசாங்கத்தினால் கட்டியெழுப்பப்பட்ட அரச வளங்களை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு எதிர்க்கட்சி திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்சமயம் பொய் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த அரசாங்கம் அரச சேவையாளர்களை 3 இலட்சமாக மட்டுப்படுத்தவிருந்தது. எனினும், இதனை நாங்கள் 15 இலட்சமாக அதிகரித்து அரச சேவையை வலுப்பெற செய்துள்ளோம்.

நாங்கள் அரச சேவை மீது நம்பிக்கை வைத்துள்ளோம். இன்று இலங்கையை சிங்கப்பூர் முறைமைக்கு மாற்றப் போவதாக தெரிவித்து வருகின்றனர். இதன் மூலம் அரச வளங்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளமை நன்றாக விளங்குவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(இ-5)

# ஜப்பானில் கடும் பனிப்புயலால் இதுவரை 11 பேர் உயிரிழப்பு

ஜப்பானில் வீசி வரும் பனிப்புயல் மற்றும் பனிப்பொழிவால் 11 பேர் பலியானார்கள்.

கடந்த சில தினங்களாக ஜப்பான் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் பனிப்புயலின் தாக்கம் கடுமையாக உள்ளது. மணிக்கு 140 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் பனிக்காற்றால் பல இடங்களில் 200 செ.மீ உயரத்துக்கும் மேலாக பனி தேங்கியுள்ளது.

இதனால் பெரும்பாலான இடங்களில் போக்குவரத்து வசதிகள் துண்டிக்கப்பட்டு மக்கள் கடும் அவதிக்கு ஆளாகினர். அந்நாட்டின் யோமியுரி ஷிம்புன் என்ற தினசரி நாளிதழ் வெளியிட்ட செய்தியின் படி, 79 வயது முதியவர், 29 வயதான தீயணைப்பு வீரர் உட்பட 11 பேர் பலியாகினர். மீட்புப் பணிக்காகச் சென்ற தீயணைப்பு வீரர், பனியை அகற்றும்போது அதில் சிக்கி இறந்தார். மற்றவர்கள் வடக்கு பகுதியின் முக்கிய தீவான ஹோக்கைடோ மற்றும் கிழக்குக் கடல் பகுதிக்கு அருகில் உள்ள ஹோன்ஷ்ீவை சேர்ந்த வயதானவர்கள்.

இது தவிர மோசமான வானிலை காரணமாக, நூற்றுக்கும் மேற்பட்ட சாலை விபத்துகளால் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பொதுத்துறை வாகனங்கள் விபத்துக்குள்ளானதுடன் புல்லட் ரயில்கள் தாமதமாக இயங்க நேரிட்டது.

நில்கட்டா மற்றும் நகானோ மலைப்பகுதியில் சாலையை பனி மூடியதால் வெளி உலகத்தோடு எந்த தொடர்பும் இன்றி 270 இற்கும் மேற்பட்டோர் சிக்கித் தவித்து வருகின்றனர். பனிப்புயலின் தாக்கம் தற்போது அதிக இடங்களில் குறைந்துள்ள தர்கவும், கடலுக்கு அருகிலுள்ள பகுதிகளில் மட்டும் பனிப்பொழிவு நீடிக்குமென்றும் ஜப்பான் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

(இ-5)

# மருந்தாளர் தேர்வுப் பரீட்சையில் வடபகுதியில் 42பேர் சித்தியடைவு

இந்த வருடத்திற்கான மருந்தாளர் வெளிவாரி தேர்வுப் பரீட்சையில் வடபகுதியைச் சேர்ந்த 42 பேர் சித்தியடைந்துள்ளனர். கடந்த 14 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மேற்படி பரீட்சையில் 1500 பேர் தோற்றியிருந்தனர்.

இதில் வட பகுதியிலிருந்து 69 பேர் தோற்றியிருந்தனர். இவர்களில் சித்தியடைந்த வடபகுதியைச் சேர்ந்த 42 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு.

ஏ.அல்த்தாப், எஸ்.அம்பிகை, பீ.ஆர்த்தீக், பீ.பொபிதா, ரீ.டானியல், எஸ். கௌரி, ஆர்.கௌசினி, பீ.கஜீதா, எஸ்.கஸ்தூரி, ரீ.கவிதா, ரீ.குகேந்திரன், எஸ்.லோகதாஸ், எம்.மயூரா, ரீ.மயூரா, ரீ.நிரோஜினி, எஸ்.பரணீதரன், ஏ.ரமணீதரன், எஸ்.ராமேஸ்வரன், ஆர்.ராகுலினி; ஜீ.சங்கீதா, எஸ்.சர்வானந்தன், கே.சண்முகரட்ணம், சீ.சிந்துஜா, எஸ்.சிவகாந்தன் எஸ். சிறிஸ்கந்தன், ரீ.சிறீதரன், எஸ்.சுபோதினி, ஆர்.சுகுணா, பீ.சுதர்ஆனந்த், டி.சுவர்ணிகா, பீ.தாமரா, கே.தயாளினி, ஆர்.தீவிதா, என்.வாரணி, ஆர்.வசந்தகுமாரி, எம்.வசிகா ந், பீ.விஜிதா, வீ.விஜய சாந்தி, ஆர்.விநாயகமூர்த்தி, எஸ்.விநோதன், என்.யாழினி, ஏ.சர்மிலா.

அதேவேளை, இந்த வருடத்திற்கான பரீட்சைக்கு போதிய கால அவகாசம் இல்லாமையால் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள், மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம் என்ற முகவரியில் நேரடியா கவோ அல்லது 077 625 6292 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

தனியார் மருந்தகங்கள் (Pharmacy) மருந்தாளர் பரீட்சையில் சித்தி டைந்த சான்றிதழ் உள்ள ஒருவரைக் கட்டாயமாகப் பணியில் வைத்திருக்க வேண்டுமென்ற சுகாதாரத் திணைக்கள நியமத்திற்கமைய, நாடெங்கிலுமுள்ள மருந்தகங்களுக்கு மருந்தா ளர்களின் சேவை அதிகமாகத் தேவை ப்படும் பின்னணியில், வயதுக் கட்டுப்பாடு எதுவுமின்றி, நல்ல சம்பள விகிதத்துடன் தொழில் வாய்ப்புக் கிட்ட மருந்தாளர் சான்றிதழ் நன்கு உதவும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

# நைஜீரியாவில் 172 பெண்கள், குழந்தைகள் கடத்தல் போகோஹறாம் தீவிரவாதிகளின் அட்டூழியம் நீடிப்பு

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், ஒரு குறிப்பிட்ட மத அரசை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் போகோஹறம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு கடந்த ஏப்ரல் மாதம் சிபோக் நகரில் உள்ள ஒரு பாடசாலையில் அவர்கள் நுழைந்து சுமார் 200 மாணவிகளை கடத்திச்சென்ற சம்பவம், உலக அரங்கில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் இன்னும் மீட்கப் படவில்லை.

இந்த நிலையில், அங்கு கம்சுரி என்ற கிராமத்தினுள் ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகள் புகுந்தன்ர். அங்கு அவர்கள் 35 பேரை சுட்டுக் கொன்றனர்.

மேலும், அங்கு 172 பெண்களையும், குழந்தைகளையும் அவர்கள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

இந்த சம்பவத்துக்கு எந்தவொரு தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. என்றாலும்கூட, இதில் போகோஹறம் தீவிரவாதிகள்தான் கைவரிசை காட்டி இருக்க வேண்டும் என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

சம்பவத்தில் தப்பி பிழைத்த அப்பாமுசா என்பவர் இதுபற்றி கூறும்போது, "கடவுள் பெரியவர் என்று தீவிரவாதிகள் கோஷமிட்டனர். அவர்கள் கடத்திச்சென்றவர்களில் எனது சகோதரியும், அவளது 7 குழந்தைகளும் அடங்குவார்கள். நான் புதருக்குள் போய் மறைந்து கொண்டதால் அதிர்ஷ்டவசமாக தப்பித்தேன்" என்றார்.

இந்த சம்பவம், நைஜீரியாவில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தூக்குத்தண்டனை பாக்கில் ஆரம்பம்

பாகிஸ்தானில் பெஷாவர் பாடசாலைகுள் தலிபான் தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்திய பயங்கர சம்பவத்தை தொடர்ந்து அங்கு மீண்டும் தூக்கு தண்டனை கொண்டுவரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 17 பேருக்கும், 2 ஆவது கட்டமாக 45 பேருக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட இருக்கிறது. இதில் பயங்கர தீவிரவாதிகள் 2 பேர் எந்த நேரத்திலும் தூக்கிலிடப்படலாம் என பாகிஸ்தான் நிர்வாகம் அறிவித்திருந்தது. இந்தநிலையில், 2009 ஆம் ஆண்டு ராவல்பிண்டியில் உள்ள இராணுவ தலைமையிடத்தை தாக்கிய அகீல் என்கிற டாக்டர் உஸ்மான், 2003 ஆம் ஆண்டு முன்னாள் இராணுவ தளபதி பர்வேஸ் முஷாரபமது தாக்குதல் நடத்திய அர்ஷத் முகமது ஆகியோர் நேற்று முன் தினம் தூக்கில் போடப்பட்டனர். அகல் குடும்பத்தினர் அவரை பைசலாபாத் சிறையில் கடைசியாக பார்த்துச் சென்றுள்ளனர்.


பாகிஸ்தான சிறைகளில் மொதத்தம 8ஆயிரம் மரண தண்டனை கைதி கள் இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(இ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிசங்கு நிலையில் கூட்டமைப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கப்போகும் நிலைப்பாடு, என்ன என்பது தொடர்பான கேள்விகள் இன்னமும் இருந்துவருகின்றன. தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னிருந்தே இது பற்றிய கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டபோது, “இன்னமும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. அறிவிப்பு வெளியான பின்னர் யோசிக்கலாம்” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறிவந்தனர். தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர், இரு தரப்பினரின் தேர்தல் அறிக்கைகளும் வெளியாகட்டும், அதன் பின்னர் முடிவை அறிவிப்போம் என்று கூறியுள்ளது கூட்டமைப்பு.

இப்போது வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டு, பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கை வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால, அவரது தேர்தல் அறிக்கையில், தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற எதுவுமே இடம்பெறப்போவதில்லை என்பது ஏற்கனவே உறுதியாகியுள்ளது. தமது தேர்தல் அறிக்கையில், 100 நாள் செயற்றிட்டத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமென்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நடத்தப்படும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தெரிவாகும் புதிய அரசாங்கமே, இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கவனம் செலுத்துமென்றும் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அதேவேளை, அரச தரப்பு வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை சாதகமாக இருந்தால்கூட, அவருக்கு ஆதரவளிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கமுடியாது. ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை அரசாங்கம் வேண்டாமென்று நிராகரித்துவிட்டது. அதனுடன் பேச்சு நடத்தக்கூட முயற்சிக்கவில்லை.

அப்படியான நிலையில், ஆளும் கட்சியின தேர்தல் அறிக்கை சாதகமான விடயங்களை கொண்டிருந்தாலும்கூட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்க முடியாது. அத்தகையதொரு முடிவை அவர்கள் எடுப்பார்களேயானால், சூடு சொரணைகளை கூட்டமைப்பு முதலில் தியாகம் செய்ய வேண்டிவரும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை பற்றி அலட்டிக்கொள்ளாத நிலையில், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில் ஒன்றுமே இருக்கப்போவதில்லையென்று தெரிந்துகொண்டே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருவரதும் தேர்தல் அறிக்கைகளுக்கு காத்திருப்பதாக கூறிவருகிறது.

பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கை வெளியானாலும்கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக முடிபு எடுக்குமென்று கூறுவதற்கில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில், இந்த தேர்தலில் ஒட்டியும் கொள்ளமுடியாமல், ஒதுங்கியும் நிற்க முடியாதொரு திரிசங்கு நிலையில் இருக்கிறதென்றே கூறவேண்டும்.

வெளிப்படையாக தமது நிலையை அறிவிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்கினாலும், இந்தத் தேர்தலில் என்ன செய்யப்போகிறது. தமிழ் மக்களை எப்படி வாக்களிக்குமாறு கோரப்போகிறதென்பது தொடர்பில் ஏற்கனவே முடிபு எடுத்துவிட்டதென்றே தெரிகிறது. அந்த முடிவு, கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென்று தமிழ் மக்களை வலியுறுத்துவதாக இருக்குமென்றும் ஆனால், யாருக்கு வாக்களிப்பது என்பதை சிந்தித்து முடிபு எடுக்கவேண்டுமெனக் கோருவதாகவும் இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

காரணம் என்னவென்றால், தற்போது தமிழ்த தேசியக் கூட்டமைப்புக்குள்ள ஒரே தெரிவாக எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது மட்டுமே உள்ளது. ஆனால், அவர் மூலமாக தமிழ் மக்களுக்கு ஏதாவது கிடைக்குமென்று சிறு உத்தரவாதத்தைக்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வழங்க முடியாதுள்ளது.

தான் ஓர் இடைக்கால ஜனாதிபதியாக இருப்பேன் என்ற நிலைப்பாட்டின் ஊடாக, பல முக்கியமான சிக்கல்களுக்குள் அகப்படாமல் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன. ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கூட, கூட்டணி தர்மத்துக்காக பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிடம், தமிழ் மக்கள் தீர்வை எதிர்பார்க்க முடியாதென்று கூறியிருக்கிறார். அவ்வாறாயின், ஆட்சி மாறறத்துக்கு பின்னர், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு தொடர்பில் பேசப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதற்கு யார் பொறுப்பாளிகளாக இருப்பர் என்ற கேள்விகள் இருக்கின்றன.

எந்தவொரு வாக்குறுதியும் இல்லாமல், ஜனாதிபதியை மாற்றுவதற்காக மட்டும் வாக்களியுங்கள் என்று தமிழ் மக்களை கோரமுடியாத நிர்ப்பந்த நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற கௌரவத்தை பெற்றுள்ள, பொறுப்பு வாய்ந்ததொரு கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இதனை மீறி ஒரு தீர்மானத்தை எடுக்கமுடியாது.

குறைந்தபட்சமாக ஒரு வாக்குறுதியாவது தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்டால், அதைக் காரணமாக வைத்து பொதுவேட்பாளர மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்குமாறு கோரமுடியும். எனினும், அதற்கான சூழல் இல்லாதபோது, எதிரணியின் பொதுவேட்பாளரை ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரும் தார்மக உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லாது போய்விடுகிறது. அதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேசிய அரசியலின் மீது ஆர்வமோ, அதனை தீர்மானிக்கும் சக்தியாக இருக்க விருப்பமோ இல்லையென்று கருதமுடியாது.

நிச்சயமாக, இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக ஆர்வம் இருந்தது. இப்போதும் இருக்கிறது. ஆரம்பக் கட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பேரம் பேசும் வாய்ப்பொன்று கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால், அரசாங்கத்தின் பிரசார உத்தியும் 'சிங்கள பௌத்த அடிப்படைவாதச் சக்திகள் மத்தியில் ஏற்பட்ட பிளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அத்தகைய பேரம் பேசும் சூழலிலிருந்து புறமொதுக்கிவிட்டன.

உதாரணத்துக்கு, கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகா பொதுவேட்பாளராக போட்டியிட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த குறைந்தபட்ச பேரம் பேசும் வாய்ப்புக்கூட இம்முறை அவர்களுக்கு கிடைக்கவில்லை. எதிரணியின் பக்கம் ஜாதிக ஹெல உறுமய இணைந்துகொண்டதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அதனுடன் ஒட்டிக்கொள்ள முடியாதென்று அரச தரப்புக்கு விளங்கியுள்ளது.

கடந்த பத்தாண்டுளாக, ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டணிக் குடும்பம் நடத்திய, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இந்த அடிப்படை அரசியல்கூட புரியாமல் போயிருக்காது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தமக்கு வேண்டாமென்று ஆளும் கட்சி கூறிவிட்டது. இதனால், எதிரணியுடன் மட்டுமே பேரம்பேசும் வாய்ப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எஞ்சியிருந்தது. அதற்குள் எதிரணியுடன் சேர்ந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமய, வெளிப்படையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணையுமாறு அழைப்பு விடுத்தாலும், உள்ளூர அதனைத் தள்ளிவைப்பதில் இன்றுவரை வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரணியுடன் இணைந்துகொண்டால், சிங்கள தேசியவாத சக்திகளின் வாக்குகள் கிடைக்காமல் போய்விடுமென்று யோசிக்கிறது எதிரணி. இதனாலேயே, பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில், தமிழர் பிரச்சினை தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படாமல், ஒதுங்கிநிற்க முடிவு செய்யப்பட்டது. இல்லாவிட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு குறைந்தபட்ச பேரம்பேசும் வாய்ப்பும் கிடைத்திருக்கும். ஏதேனும் குறைந்தளவிலான அதிகாரங்கள் தொடர்பான உத்தரவாதத்தையேனும் பெற்றுக்கொள்ளும் சூழலும் உருவாகியிருக்கும். ஆனால், இப்போது நிலைமை மாற்றமடைந்துள்ளதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான் பேச்சுக்கள், எதிலும் ஈடுபடும் தேவையும் இல்லாமலே போயுள்ளது. இதனை கிட்டத்தட்ட ஒரு புறமொதுக்கப்பட்ட நிலையென்று கூறலாம்.

சுமார் நான்கு இலட்சம் வாக்குகளை தீர்மானிக்கும் சக்தி பெற்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தபோதிலும், இந்தத் தேர்தலில் ஓரம் கட்டப்பட்ட நிலையிலிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இது இனவாதம் இன்னமும் கோலோச்சுகிறது. தமிழ் மக்களுக்கு இன்னமும் சமமான உரிமைகள் கிட்டவில்லை என்பதற்கு சரியானதொரு உதாரணமாகவும் வாய்த்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வேடனுக்கும் நாகத்துக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பதாகவும் பேயா - பிசாசா என்று தீர்மானிக்கவேண்டிய நிலையில் இருப்பதாகவும் உவமானங்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். அதாவது, இரண்டு பிரதான வேட்பாளர்க்ளையும் நல்லவர் என்று சுட்டிக்காட்டத்தக்க நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை என்பதையே இது வெளிப்படுத்திநிற்கிறது. வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், “கொடூரமான பேய்க்கு பதிலாக, நல்ல பிசாசு வந்தால் பரவாயில்லை” என்று கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரனோ, “இந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒன்றாக அமையப்போவதில்லை” என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, எந்த வேட்பாளர் குறித்தும் நம்பிக்கையூட்டுவதற்கு கூட்டமைப்பு தயாராக இல்லை. ஏனென்றால், அது பின்னொரு காலத்தில் கூட்டமைபபின் கழுத்தின் மீது சுருக்காக வந்து விழும் ஆபத்துள்ளது. எனவே, எவரையும் ஆதரிக்காமல், நடுநிலை என்ற பாத்திரத்தை வகிப்பதனூடாக தமது அரசியல் நகர்வை மேற்கொள்ள முனைகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ் மக்கள் எப்போதுமே இத்தகைய சூழ்நிலைகளில் குறிப்பறிந்து நடந்துகொள்வதில் வல்லவர்கள். விடுதலைப் புலிகளின் காலத்திலேயே இதுபோன்ற நழுவல் போக்கு கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாக ஈரோஸ் களமிறங்கிய போது, விடுதலைப் புலிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதேவேளை, அவர்கள் வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்கவும இல்லை. என்றாலும், அந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகள், ஈரோஸ் அமைப்பை மறைமுகமாக ஆதரித்தனர். அதனை தமிழ் மக்கள் குறிப்புணர்ந்து வாக்களித்திருந்தனர். அதுபோன்ற நிலை, பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்திலும் நீடித்தது.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றப்போவதும் அதே பாணியைத் தான். தேர்தலில் ஒதுங்கி நிற்பதுபோல நிற்கப்போகிறது. ஆனால், ஒன்று மட்டும் வித்தியாசமாக இருக்கும். புலிகள் வாக்களிக்குமாறோ, புறக்கணிக்குமாறோ கோரவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை கட்டாயம் வாக்களிக்குமாறு கோரப்போகிறது. தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய நிலைப்பாட்டை எடுத்தாலும்கூட, கட்டாயம் வாக்களியுங்கள் என்பதையே பிரதானமாக வலியுறுத்தப்போகிறது. இதன் மூலம், ஓரங்கட்டப் பட்டிருந்தாலும், தமிழ் மக்களின் அரசியல் பலத்தை வெளிக்காட்டலாமென்று கருதுகிறது கூட்டமைப்பு.

இந்தத் தேர்தலிலிருந்து ஒதுங்கி நிற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டிக் கொண்டாலும், இந்தத் தேர்தல் தொடர்பாக எந்த எதிர்பார்ப்பும் அதற்கு இல்லையென்று கூறமுடியாது. ஆட்சி மாற்றம் நிகழ்வதை கூட்டமைப்பு விரும்புகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பதிலாக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானால் பரவாயில்லை என்றும் கருதுகிறது. ஆனால், அதை வெளிக்காட்டிக்கொள்ள முடியாது. ஏனென்றால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அவர் எப்படி நடந்துகொள்வாரோ என்ற அச்சமுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் யாரை எப்படி மாற்றுமென்று கூறமுடியாது. அந்த அச்சமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தூர விலக்கியும் வைத்திருக்கிறது. அதேவேளை, தமிழ் மக்களை பொறு த்தவரையில், ஆட்சி மாற்றத்தை விருமபுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அது 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலேயே வெளிப்பட்டிருந்தது. ஏனவே, அவர்கள் மாற்றான தெரிவாகவுள்ள பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க முனையலாம்.

என்றாலும், தமிழ் மக்கள் எந்தளவுக்கு வாக்களிப்பில் பங்கேற்பர் என்று சரியாக அனுமானிக்க முடியாது. ஏனென்றால், எந்த நம்பிக்கையையும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அளிக்காத நிலையில், தமிழ் மக்களை வாக்களிப்பு நிலையங்களை நோக்கி நகர்த்துவது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்காது.

**கே.சஞ்சயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1018

## மரியாதையைக் கொடுக்கும் தொழில்!

வைசாலி நகரத்தில் சோமகுப் தன் என்ற வணிகன் வசித்து வந்தான்.

குறுகிய காலத்தில் அதிக



முதலீடு எதுவுமின்றி ஏராளமான பொருள் சம்பாதித்து கோடீஸ்வரனாக ஆசை கொண்டான்.

ஆனால், எத்தகைய தொழிலில் அவ்வாறு முதலீடே இல்லாமல் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று அவன் யோசித்த வந்தான்.

ஒருநாள் நகரத்தில் ஒரு பெரிய செல்வந்தரின் வீட்

**அம்புலிமாமா கதைகள்**

டில் லட்சக்கணக்கானப் பணத்தை திருடர்கள் வீடு புகுந்து திருடிச் சென்றனர்.

திருட்டுத் தொழிலில் முதலீடு எதுவுமின்றி ஏராளமாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்ற உண்மை அவனுக்கு அப்போதுதான் விளங்கியது. உடனே அவன் தன்னுடைய வியாபாரத்தை விட்டு விட்டு, திருட்டுத் தொழிலில் எவ்வாறு ஈடுபடு வது என்று யோசிக்கத் தொடங்கினான்.

சில நாட்களுக்குப் பிறகு நகர எல்லையில் உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் சில திருடர்கள் வசிக்கின்றனர் என்று தெரிந்து கொண்டு, அவர்களுடன் பரிச்சயம் செய்து கொள்ள இரவு நேரங்களில் அங்கு சென்று உறங்க ஆரம்பித்தான்.

திடீரென அந்நியன் ஒருவன் இரவு நேரங்களில் தங்கள் மறைவிடத்தில் தூங்குவது கண்ட திருடர்கள் சோமகுப்தனை ஒரு அநாதை என்றும், தமது திருட்டுத் தொழிலுக்கு அவனையும் பயன்படுத்திக் கொள்ள லாம் என்று எண்ணினர்.

ஒரு நாள் இரவில், திருடர்கள் இருவர் சாமான்கள் சுமக்கும் காவடிகள் கொண்டு வந்தனர்.

அவர்களில் குட்டையாக இருந்தவன் தூங்கிக் கொண்டிருந்த சோமனை எழுப்பி, “தம்பி! எங்களுடைய சகா ஒருவன் இன்று வரவில்லை.

அவனுக்கு பதிலாக நீ எங்களுடன் திருட வருவாயா?” என்று கேட்டான்.

திருட்டுத் தொழிலில் அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக்காத்திருந்த சோமன் உடனே மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான்.

உடனே இரு திருடர்களும் சோமனை ஒரு விவசாயி போல வேடம் தரிக்கச் செய்தனர்.

பிறகு அவன் தலையில் வெல்லம் அடங்கிய ஒரு மூட்டையை ஏற்றி, கையில் ஒரு கழியையும் கொடுத்தனர்.


திருட்டுத் தொழிலுக்கு இத்தனை ஒப்பனை தேவையா என்று சோமன் ஆச்சரியப்பட் டான்.

பிறகு அவர்கள் இருவரும் சோமனைத் தன்னுடன் அழைத்துச் சென்றனர்.


அவர்கள் நகரத்தின் பிரதானத் தெருக்களில் சென்றனர். செல்லும் வழியில் இருட்டில் படுத்திருந்த ஒரு நாயின் வாலைத் தெரியாமல் சோமன் மிதித்து விட, நாய் பயங்கரமாகக் குரைத்தது.

குரைப்பு சத்தத்தைக் கேட்டதுமே, சோமன் மிகவும் பயந்து போனான்.

அவன் தலையிலிருந்த மூட்டையிலிருந்து வெல்லம்



தரையில் விழுந்து சிதற, அதை நாய் பாய்ந்து சென்று தின்னத் தொடங்கி, தான் குரைப்பதை நிறுத்தியது.



“தம்பி!நீ திருடப் போகிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு எச்சரிக்கையாக நடந்து செல்ல வேண்டும்.

இப்போது இந்த சத்தத்தைக் கேட்டு யாராவது காவலன் வந்தால் ஏதாவது உளறி விடாதே! வாயை மூடிக் கொண்டிரு!” என்று உயரமான திருடன் எச்சரித்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள், அங்கு குதிரை மீது சவாரி செய்தவாறு ஒரு காவலன் தோன்றினான்.

அவர்களைக் கண்டதும், “யாரடா நீங்கள்? இந்த இரவு நேரத்தில் எதற்கு தெருக்களில் திரிந்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று உறுமினான்.

அவனைக் கண்டதுமே சோமனின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

பயத்தில் கை, கால்கள் நடுங்கின.

உடனே, குட்டையான திருடன், “ஐயா! நாங்கள் பக்கத்து கிராமத்து வியாபாரிகள்.

வெல்லம் விற்பதற்காக நகரத்திற்கு வந்தோம். வியாபாரம் முடிந்து இரவு தங்குவதற்காக விடுதியை நோக்கிச் செல்லுகையில், வழி தவறிவிட்டோம்.

சத்திரத்திற்குச் செல்லும் வழியை தயவு செய்து காட்டுவீர்களா?” என்று அப்பாவி போல் நடித்தான்.

(தொடரும்)



12.2014
21

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 69 - வெஸ்பசியான் ரோமப் பேரரசின் ஒரே ஆண்டில் 4 ஆவது பேரரசனாக முடிசூடினான்.
- 1768 -நேபாளம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு இன்றுவரையுள்ள நாடு தோற்றுவிக்கப்பட்டது.
- 1902 - இலங்கையில் போவர் போர்க் கைதிகளாக இருந்தவர்கள் தென்னாபிரிக்காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.
- 1913 - உலகின் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி “நியூயோர்க் வேர்ல்ட்” பத்திரிகையில் வெளியானது.
- 1967 - உலகின் முதலாவது இருதயமாற்றுச் சிகிச்சை பெற்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த லூயிஸ் நாஷ்கான்ஸ்கி சிகிச்சை பெற்று 18 நாட்களின் பின்னர் இறந்தார்.
- 1968 - சந்திரனுக்கான மனிதனை ஏற்றிச் சென்ற விண்கலம் அப்பல்லோ 8 புளோரிடாவிலிருந்து ஏவப்பட்டது. புவியீர்ப்பைத் தாண்டிச் சென்ற முதலாவது மனித விண்கலம் இதுவாகும்.
- 1971 - ஐ.நா அவையின் பொதுச் செயலாராக கூர்ட் வால்ட்ஹெயிம் தெரிவானார்.
- 1973 - அரபு-இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஜெனீவா மாநாடு ஆரம்பமானது.
- 1979 - ரொடீசியாவின் விடுதலைக்கான உடன்பாடு லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.
- 1991 - கசக்ஸ்தானின் அல்மா-ஆட்டா நகரில் கூடிய பதினொரு சோவியத் குடியரசுகளின் தலைவர்கள் தனிநாடுகளின் பொதுநலவாய அமைப்பு உருவாகியவுடன் சோவியத் ஒன்றியம் கலைக்கப்படும் என அறிவித்தனர். இதன்படி டிசம்பர் 26 ஆம் நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
- 1995 - பெத்லகேம் நகரம் இஸ்ரேலியர்களிடமிருந்து பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

gpwg;Gfs

- 1878 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (இ. 1953)
- 1932 - யூ. ஆர். அனந்தமூர்த்தி, கன்னட எழுத்தாளர் (இ. 2014)
- 1942 - ஹூ சிங்தாவ், சீன மக்கள் குடியரசின் தலைவர்
- 1948 - சாமுவேல் ஜாக்சன், அமெரிக்க திரைப்பட நடிகர்
- 1963 - கோவிந்தா, இந்திய நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 21.12.2014

# இணுவில், மருதனார்மடம், சுன்னாகம்



### ஆசிச் செய்தி

**அனுமன் அடியவர்களே!**

அண்டங்கள் முழுவதும் இறைவனுடைய ஆக்ஞ்ஞை பிரகாரம் (கட்டளை) செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. பஞ்சபூதங்களில் குருவாக ஆஞ்சநேயரை புராணங்கள் எடுத்தியம்புகின்றன. இராமனின் உற்ற தோழனாகவும் தாசனாகவும் சொல்லப்படுகின்ற தெய்வசக்தி பெற்றவர் ஆஞ்ச நேயப்பெருமான். மனிதனும் தெய்வமாகலாம். இது ஒரு பாடலின் அடி இராம மந்திரத்தை உச்சாடனம் செய்து தெய்வ நிலையை அடைந்தவர். கலியுகத்தின் கொடுமைகளை தாங்கிக்கொள்ள முடியாத பக்தர்கள் ஆஞ்சநேய சுவாமியிடம் முறையிடுகின்ற தன்மையை இந்தக் கோயிலில் காணக்கூடியதாக உள்ளது. மக்களின் வாழ்க்கையிலேயே வருகின்ற சோகங்கள், குடும்பத்தகராறு, காணித் தகராறு, வழக்குத் தகராறு, கல்வியில் முன்னேற்றமின்மை, பிள்ளைப்பேறு, அந்நிய தேசம் செல்லுதல், இப்படியான கோரிக்கைகளை முன்வைத்து ஆஞ்சநேயரை வெற்றிலை மாலை, துளசி மாலை, தேசிக்காய் மாலை, வடைமாலை, எண்ணெய், செந்தூரம் என்பன அணியச் செய்து தங்களுடைய நேர்த்திகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இந்த நாட்டிலேயே மட்டுமல்ல சுவிஸ் கனடா, ஜேர்மன், அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா, நோர்வே, கொலண்ட் போன்ற அந்நிய தேசத்திலிருந்து ஆலயத்தின் வளர்ச்சியிலும் சமூகப் பணியிலும் உபயத்தை ஏற்று செய்வதில் நிகரற்றவர்களாகத் திகழ்கின்றார்கள். இன்று நடைபெறுகின்ற தேர் உற்சவத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முதல் திருவாளர் சுப்பிரமணியன் கதிர்காமநாதன் தனது உபயமாக ஏற்று செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் தேர் உற்சவத்திற்குரிய நிதியை அனுப்புவதோடு மட்டுமல்லாமல் தனது உறவினரை அனுப்பி உற்சவத்தை திறம்பட நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல இவ்வருடம் தேருக்கு வர்ணப்பூச்சுகளினாலே அலங்காரம் செய்து தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த தேர் உற்சவத்தில் அடியவர்கள் அனைவரும் கலந்து பஞ்சமுக ஆஞ்சநேயருடைய திருவருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டி நல்லாசி கூறுகின்றோம். குறிப்பாக திரு.அருளம்பலம் - பத்மநாதன் அவர்கள் சுவிஸ் மாநகரத்திலே இருந்து கொண்டு உபயகாரர்களை ஆலயத்தோடு இணைத்து நல்ல பணிகளை ஆற்றுகிறார்கள். அவர்களுக்கும் எங்களுடைய ஆசீர்வாதம் கிடைப்பதாக .

**லோகா சமஸ்தா சுஹினோ பவந்து**
**சிவ ஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**
**ஆதீன கர்த்தாவும், சிவாச்சாரியாரும்**
**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**
**மருதனார் மடம், சுன்னாகம்.**


### வாழ்த்துச் செய்தி





ஈழ நாட்டின் வடதிசையிலே அமைந்துள்ள யாழ் குடாநாட்டிலே சைவமும் தமிழும் சிறந்தோங்கும் மருத னார்மடத்திலே பக்தர்களுக்கு அருள் வழங்குவதற்காக எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய த்தில் இன்று தேர் திருவீதி உலா வருவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

இன்று மக்களை அவலப்படுத்திக் கொண்டிரு க்கும் கஷ்டங்கள், துன்பங்கள், வறுமைகள் போன்றவற்றிலிருந்து எதிர்நீச்சல் அடிக்கும் வல்லமையினையும் அனைவரிடத்திலும் நன் மதிப்பை பெற்றிடவும், எல்லாத்துறையிலே இருக் கின்றவர்களும் வளர்ச்சி பெற்று மேலோங் கிடவும் இந்த நாட்டிலே பொருளாதாரம் வளர்ச்சி பெற்று சாந்தியும், சமாதானமும் நிலைத்திடவும், மாணவர்கள் கல்வியிலே மேலோங்கி உத்தியோக வாய்ப்புகள் பெற்றுக் கொள்ளவும் இந்நாளிலே தேரேறி வருகின்ற பஞ்சமுக ஆஞ்சநேயரின் பாதாரவிந்தங்களை போற்றி வணங்குவோம்.

**Mr.S.Gnaesvaran, Agency Leader Allianz Life Insurance Lanka Ltd, Jaffna Metro**





### ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் கங்கேசன்துறை வீதியில் இணுவில் மருதனார் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் 2001 தைத்திங்களில் குடமுழுக்கு நடைபெற்று ஆஞ்சநே யப் பெருமானின் அருளாலும் இறை அருள் பெற்ற விணாசித் தம்பி ஐயா அவர்களின் நல்லாசியும் ஆதீன கர்த்தாவின் அருள் நிறைந்த தவிப்பாலும் வளர்பிறையென ஆலயம் வளர்ச்சியுற்று மாமலைக் கோயிலின் முன்னால் கோபுரம் மலை என எழுந்து நிற்க சஞ்சீவி மடம் அருட் சிறப்பாய் அமைய பஞ்சமுக ஆஞ்சநேயர் தேடி வர வசந்த மண்டபம் சிறப்பாய் அமைய வீதி சுற்றி வழிபட காணிசேர பஞ்சமுகர் வீதியுலா வர சித்திரத்தேர் அமைய விஸ்வரூப ஆஞ்சநேயர் சிறப்பாய் அமைய சுற்று மதில்களோடு ஆல யம் சிறப்பாய் மிளிர 2013 இரண்டாவது குடமுழுக்கோடு நிறைவாக ஆலயம் அருட் சிறப்போடு விளங்கி 21.12.2014 இல் பஞ்சமுகர் தேரேறி வருகின்றார் என்றால் அனுமந்தன் பேரருளும் ஆசியுமே சான்றாகும்.

தேர் உற்சவ காலத்தில் மட்டுமே பஞ்சமுக ஆஞ்சநேயர் திருவீதி உலா வருகின்ற காட்சி இடம் பெறும். இதுவும் ஒரு சிறப்பம்சமாகும். இத்தினத்தில் எம்பெருமானை வழிபட்டு உய்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

### தீயோரை அழித்து நல்லோரைக் காக்கும் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர்!



பரித்ராயன ஸாதுனாம் விநாஸாய ஸாதுக்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனாய ஸம்பவாமி யுகேயுகே!;;

என்று கிருக்ஷ்ணபரமாத்மா கீதையிலே உபதேசித்தருளினார். தீயோரை அழித்து நல்லோரைக் காக்க நான் யுகம் யுகம்தோறும் அவதாரம் எடுப்பேன் என்பது அதன் பொருள். மருதனார் மடம் பதியுறை ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் அப்பதியுறைவாழ் மக்களுக்கு வேண்டுவனவற்றை ஈந்து தீயோரை அழித்து நல்லோரைக் காத்து நல்லாட்சி புரிகின்றார்.

ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் மிகுந்த இராம பக்தன். தன் மார்பைக் கிழித்து இராம இலக்குமனனையும் சீதா பிராட்டியையும் நெஞ்சில் நிறுத்தியவர். நித்திய பிரமச்சாரி. மிகவும் பலம்பொருந்திய சிறந்த வீரன். இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட ஒரு உன்னத தெய்வம் ஸ்ரீ ஆஞ்சநேய பகவான்.

பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்கள் வைணவ மதக் கோட்பாட்டை அவனியிலுள்ளோர் அறியும் பொருட்டும் எமது மக்களின் துயர் களைந்து அவர்களுக்கு வேண்டும் வரங்களை நல்குவதற்காகவும் மருதனார்மடப் பதியில் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஸ்வாமிகளைப் பிரதிட்டைசெய்து மகாகும்பாபிஷேகம் நடத்தி, நித்திய, நைமித்திய கருமங்களை நிகழ்த்தி வருகின்றார்.

இன்று எம்பெருமான் தேரில் ஆரோகணிக் கின்றார். ஆலய மகோற்சவங்களில் கொடியேற்றம் படைத்தலையும், வாகனாதி உற்சவங்கள் காத்தலையும், வேட்டைத் திருவிழா மறைத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும் தீர்த்தத் திருவிழா அருளலையும் குறிக்கின்றன. இன்றைய தினத்தில் ஆஞ்சநேயப் பெருமான் துஷ்ட நிக்ரக ஸிஷ்ட பரிபாலனம் செய்கின்றார். அதாவது கிருஷ்ண பரமாத்மா கீதையில் குறிப்பிட்டமை போன்று தீயோரை அழித்து நல்லோரைக் காக்கின்றார். எம்பெருமானின் தேர்த்திருவிழா சிறப்பாக அமைய எல்லாம்வல்ல ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயரைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**என்றும் மக்கள் சேவையிலுள்ள,**
**லயன் சி.ஹரிகரன்**
**(உறுப்பினர் - வலி.வடக்கு பிரதேச சபை)**
**(தலைவர் - வலி.தெற்கு வர்த்தக சம்மேளனம்)**

அனைத்துவிதமான ஆடைத்தெரிவுக்கும்
நாடவேண்டிய இடம்
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
Boys & Baby Selection
பலாலி றோட், உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
077 228 8245

SakanaWork Shop
Proprietor
T.Jeyachandran
No.40, K.K.S. Road,
Maruthanarmadam,
077 915 2673,
077 162 1971

புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்
உங்கள் அபிமான
V.M.K.ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
No.80/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 720 1117,077 784 9369
கிளை: நியூ வி.எம்.கே. ஜுவல்லறி
நவீன் சந்தை, கண்டிவீதி,
சாவகச்சேரி.
021 222 2515

Thiveya Cellular Center
No.382, K.K.S.Road,
Maruthanarmadam , Chunnakam.
T.P:021 320 9851
Dealears in all kinds of Cellular Phones Assessories etc...
Sales and Repairing

சகல விதமான நகைகளையும் 22
கரட்டில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள
நியூ கவுசிக் ஜுவல்லறி
பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்திக்கருகில்,
தொ.பே. 077- 218 2647
021 -568 5204

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக்காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 4353
கிளை
A9 வீதி,
வசந்தி திரையரங்கு
முன்பாக,
வவுனியா
T.P: 024 222 7777,
077 700 444

Health Care pharmarcy
&
Grocery
No.29, K/K.S. Road,
Maruthanarmadam, Jaffna.
T.P:077 624 6715

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.mahinda2015.com

சங்கைக்குரிய தேரர்களே, மதகுருமார்களே, அன்பிற்குரிய கணவான்களே, சீமாட்டிகளே, செல்விகளே...

# "அரச சேவையிலுள்ள நீங்கள், எமது தேசத்திற்கு கௌரவம்."


நீங்கள் என்னுடைய சகோதர, சகோதரிகளாவீர். இது நாம் வெற்றி கொண்ட அபிமானம் மிக்க தாய்நாடாகும். இலங்கை, அரசாங்கத்தின் சகல அரசியல் மற்றும் அபிவிருத்தித் துறைகள் வெற்றியடைந்த போது நீங்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று எங்களுக்கு பேராதரவை அளித்தீர்கள். 2005ம் ஆண்டில் நீங்கள் என்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தீர்கள். எங்கள் தாய்நாட்டை விடுவிக்கும் பொறுப்பையே அன்று என்னிடம் ஒப்படைத்தீர்கள். இந்த பொறுப்பை ஒப்படைத்த பின்னர் என்னை கைவிடாமல் தொடர்ந்தும் எனது அபிவிருத்தி பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினீர்கள். அரச ஊழியர்களான நீங்கள் பொறுப்புடன் சிறப்பாக பணியாற்றினீர்கள் இதன் மூலம் அரசாங்கத்தை வலுவான அடித்தளத்தில் நிலைத்திருக்கச் செய்தீர்கள். இவ்விதம் எனக்கு ஆதரவளித்தீர்கள். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு யுத்தத்தை நிறுத்த வேண்டிய நிலை உருவாகியிருந்தது. இதனால் பயங்கரவாதத்தை முழுமையான ஒழித்துக்கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்விரு பணிகளையும் என்னால் சாதிப்பதற்கு உங்களிடையே ஒன்றுமையும் ஐக்கியமும் நிலவியதே பிரதான காரணமாக அமைந்தது.

2010ம் ஆண்டில் நீங்கள் எனக்கு இன்னுமொரு பொறுப்பை ஒப்படைத்தீர்கள். அது எங்கள் நாட்டை அபிவிருத்தி செய்யும் பொறுப்பாகும். இதில் பொருளாதார அபிவிருத்தி மட்டுமன்றி சமூக அரசியல் அபிவிருத்தியும் இணைந்திருந்தது. 2010ம் ஆண்டு முதல் இன்று வரை இவ்விருதுறைகளிலும் சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி நாட்டை துரித கதியில் முன்னேற்ற பாதையில் எடுத்துச் செல்லும் சாதனையை ஏற்படுத்தியுள்ளோம். நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்திய பின்னர் நாம் அடைந்த வெற்றிகள் பெருமளவு பயனுள்ளதாக அமைந்துள்ளது. 2009ம் ஆண்டிற்கு பின்னர் நாடு முன்பிருந்ததைவிட எந்தளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது? 2010ம் ஆண்டிற்கு பின்னர் முன்பிருந்ததைவிட பொருளாதார அரசியல் அபிவிருத்தி துறைகளில் நாடு பிரமிக்கத்தக்க அளவிற்கு முன்னேற்றம் அடைந்தது. இவை எல்லாவற்றுக்கும் நீங்கள் மகிழ்ச்சிகரமான பிரதிபலிப்பை தருவீர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும்.

நாட்டின் அபிவிருத்திக்கு அரச ஊழியர் சேவை அத்தியாவசியமானது என்பதை நீங்கள் உங்கள் பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றி ஊர்ஜிதம் செய்துள்ளீர்கள். நாம் அரச ஊழியர் சேவை ஒரு கௌரவமான சேவையாக அதிஉன்னத நிலைக்கு கொண்டு வருவதற்கு எத்தனித்த போது அதனை வலுவிழக்கச் செய்து அதற்குரிய சலுகைகளை குறைத்து அரச ஊழியர் சேவை துச்சமாக மதித்து வந்த ஒரு காலம் இருந்தது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும். அரசாங்க சேவை நாட்டிற்கு பெரும் பளுவாக அமைந்திருக்கின்றது என்று தெரிவித்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, அரசாங்க ஊழியர் சேவை எந்த வகையிலும் பொருத்தமற்றது என்ற நிலைப்பாட்டை முன்பிருந்த அரசாங்கங்கள் கடைபிடித்து வந்தன.

நான் உங்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தேன். நீங்கள் செய்யும் சேவைக்கு பொருத்தமான சம்பளத்தையும் பெற்றுக்கொடுத்தேன். எந்தவொரு அரசாங்க திணைக்களத்தையோ, தேசிய சொத்துக்களையோ விற்றுவிடுவதற்கு நாம் இடமளிக்கவில்லை. முன்பு இருந்த அரசாங்கங்கள் விற்ற அரசுக்கு சொந்தமான பல நிறுவனங்களை நாம் மீண்டும் அரச உடமையாக்கியுள்ளோம். அதுபோன்று அரச சேவையின் ஆளணியை 6 இலட்சத்தில் இருந்து 14 இலட்சமாக அதிகரித்தும் இருக்கிறோம். இவ்விதம் சகல பொது மக்களுக்கு தேவையான சேவைகள் அனைத்தும் அபிவிருத்தி செய்து பாரிய அபிவிருத்தியை நோக்கி நாட்டை முன்னெடுத்து செல்வதற்கு எங்களுக்கு முடிந்தது. உங்கள் பிள்ளையை வாழ்க்கையில் வெற்றியடையச் செய்துள்ளோம். அவர்களின் திறமையை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பை அளித்து அப்பிள்ளைகளை உலகையே வெல்லக்கூடிய அளவிற்கு நாம் உயர்த்தியுள்ளோம். முன்னைய அரசாங்கங்கள் உங்களிடம் இருந்து பறித்த ஓய்வூதியத்தை நாம் மீண்டும் பெற்றுக் கொடுத்து ஒன்பது வருடங்களுக்கான அபிவிருத்தியின் பயனை உங்களுக்கு வழங்கியதுடன் நீர் மின்சக்தி மற்றும் எரிவாயுவின் விலையை குறைத்து, உங்களுடைய வாழ்க்கைச் செலவையும் குறைப்பதற்கும் எங்களால் நடவடிக்கை எடுக்க முடிந்தது. உங்களுடைய தன்னலம் அற்ற சேவைக்கு நட்பயனை அளிக்கும் எண்ணத்துடனேயே நாம் இவ்விதம் உங்களுக்கு உதவி செய்துள்ளோம்.

2015 ஒரு புதிய புத்தாண்டு அல்ல. யுத்தத்தினாலும் பயங்கரவாதத்தினாலும் அழிவை எதிர்நோக்கி மீண்டும் தலைநிமிர்ந்து கம்பீரமாக நிற்கும் எங்கள் தாய்நாட்டின் புதிய இலட்சியங்களுடன் ஆரம்பமாகும் ஒரு புத்தாண்டு இதுவாகும். 2005ம் ஆண்டு முதல் அபிவிருத்திற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், ஜனநாயகத்தின் மேம்பாட்டிற்காகவும், நல்லாட்சியை நிலவச் செய்வதற்காகவும் நாம் வலுவான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் நிலைபெறச் செய்வதற்கான முதலாவது நிபந்தனையை நிறைவேற்றிய பின்னர் இரண்டாவது நிபந்தனையான வலுவுடன் நாட்டை முன்னேற்ற பாதையில் வீறுநடைபோடச் செய்யும் முயற்சிகளுக்கும் இப்போது நல்ல பலாபலன்களை கொண்ட வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளது. இந்தத் தடவை மீண்டும் நான் உங்கள் ஆணையை எதிர்பார்த்து நாட்டிற்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளை தோற்கடித்து, எதிர்கால சந்ததியினருக்காக இந்த நாட்டின் அபிவிருத்தியின் வெற்றியை பாதுகாப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காகவே இதற்கான ஆணையை உங்களிடம் கேட்கிறேன்.



தனிமனிதனையும், குடும்பத்தையும், கிராமத்தையும், பிரதேசத்தையும் நாட்டையும் ஆன்மீகரீதியில் முன்னெடுத்துச் சென்று நல்லொழுக்கமுடைய ஒரு சமுதாயத்தின் பங்குதாரர்களாக இணைந்து, இந்நாட்டை ஆசியாவில் மட்டுமல்ல முழுஉலகிலும் அதி உன்னத நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் எங்களை தயாராக்கிக் கொள்ள வேண்டும். அதற்காக எங்கள் தாய்நாட்டின் பொறுப்புள்ள பிரஜைகள் என்ற முறையில் அரச ஊழியர்களின் கடந்தகால எதிர்கால தியாக உணர்வுடைய சேவை, ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை இந்நாட்டிற்கு எதிர்காலத்தில் அவசியமாகும். ஜனாதிபதி தேர்தலில் தாய்நாட்டின் மீது பற்றுள்ள நீங்கள் உங்கள் முன்னேற்ற பயணத்தின் தலைவராக என்னை தெரிவு செய்வீர்கள் என்று எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் நிச்சயம் தெரியும். வாருங்கள் நாட்டை கட்டியெழுப்பி அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டு நாட்டை வெற்றி பாதையில் இட்டுச் செல்லும் தலைவர்களாக மாறுவோமாக.

2015ம் ஆண்டு உங்களுக்கு வளமான சகல சௌபாக்கியங்களும் கொண்ட ஒரு வருடமாக அமைய வேண்டும்.

உங்கள் அன்பிற்குரிய

பாதுகாப்பான தேசம்

வளமான எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**14.12.2014 அன்று ஞாயிறு வலம்புரியில் "வெண்ணிலா" என்ற தலைப்பில் சிறுமியின் கதை வெளியாகியது. அதனைத் தொடர்ந்து இவ்வாரம், சிரேஷ்ட உளவளத் துணையாளரும், எழுத்தாளருமான கோகிலா மகேந்திரன் அவர்களின் நேர்காணல் இடம்பெறுகின்றது.**

**கேள்வி:1.** குறித்த சிறுமியின் நிலை பற்றியும், அவரின் உளநலத்தைக் காக்க செய்யவேண்டியவை எவை என்பது பற்றியும் கூறமுடியுமா?

**பதில்:** பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுதல் என்பது ஒரு நெருக்கீடு. எமது வாழ்வில் வருகின்ற நெருக்கீடுகள் மனிதர்களில் ஏற்படுத்தும் தாக்கத்தின் அளவைப் பொறுத்து அவற்றைச் சிறிய நெருக்கீடுகள், பெரிய நெருக்கீடுகள், மனவடுவுக்குரிய நெருக்கீடுகள் என மூன்று வகையில் உளவியல் அறிஞர்கள் வகைப்படுத்துவர். பாலியல் துஷ்பிரயோகம் மனவடுவுக்குரிய நெருக்கீடு ஆகலாம். குறித்த சிறுமியின் உளப்பிரச்சினை நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு ஆகியிருக்கின்றது என்று அவர் கூறும் குணங்குறிகளிலிருந்து தெரியவருகின்றது. ஆயினும் பாலியல் துஷ் பிரயோகத்திற்கு உட்படும் எல்லோருக்கும் நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு வரும் என்று நிச்சயமாக கூறமுடியாது. தாங்குதிறன் மிக்கவர்களுக்கு அப்படியொரு உளப் பிரச்சினை வராதுபோகலாம்.

மனவடுவுக்குரிய ஆங்கிலச்சொல்லின் (trauma) மூலம் கிரேக்க மொழி. அம்மொழியில் அச்சொல்லுக்குக் காயம் என்று பொருள. எமது மனதில் பெரிய காயத்தை ஏற்படுத்தக் கூடிய நெருக்கீடுகள் அவை.

குறித்த சம்பவம் நடைபெற்ற நேரத்தில் சிறுமி பெரும் பயங்கர உணர்வை அனுபவித்திருப்பார். உதவியற்ற கையறு நிலையில் இருப்பதாக உணர்ந்திருப்பார். ஏனெனில் சம்பவம் நடைபெற்ற இடம் வேறு மனிதர்கள் யாரும் காணப்படாத தனிமையான இடம்.

மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்கள் ஒருவருடைய மூளை அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சம்பவம் நடைபெறும் நேரத்தில் தன்னாட்சி நரம்புத்தொகுதி தூண்டப்படுவதால் "அலார" விளைவுகள் பல ஒரே நேரத்தில் இடம்பெறுகின்றன. இதயத்துடிப்பு வீதம், சுவாச வேகம் என்பன அதிகரிக்கின்றன. கண்மணி விரிகின்றது. தசைகள் இறுக்கமடைகின்றன. உணவுக் கால்வாய்த்தொகுதியின் தொழிற்பாடு மந்தமடைவதால் பசியின்மையும், சாப்பிட விருப்பமின்மையும் ஏற்படுகின்றன. சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படலாம். மனம் பெரும் பதற்ற நிலைக்குள் தள்ளப்படுகின்றது. இந்த அனுபவம் மூளையில் உள்ள 'பயவலைப் பின்னலில்" சூடான ஞாபகமாகச் சேமித்து வைக்கப்படுகின்றது. காலப்போக்கில் இது நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு என்ற உளப்பாதிப்பாக மாற்றமடையலாம்.

முன்னர் நடைபெற்ற அந்த நிகழ்வு இப்போது மனதில் அடிக்கடி ஊடுருவி வந்து கொண்டிருக்கின்றது. பயங்கரக்கனவு வருகின்றது. மரக்குற்றியில் உட்காரும்போதும் யாரோ அருகில் நிற்பது போன்ற பயம் ஏற்படுகின்றது. இதை "அதிபர மனஎழுச்சி" என்று சொல்வார்கள். குறித்த நபரைப் போன்ற தோற்றமுள்ள வேறு மனிதர்களையும் தவிர்க்க விரும்பும் நிலை காணப்படுகின்றது. "புல்லு வெட்ட வாற அண்ணாவைக் கண்டால் ஒழிச்சிடுவன்" என்பதிலிருந்து அது தெரிகின்றது.

"நெருப்புக்குள்ள குதிக்க வேணும் போல இருக்கு" என்பது தற்கொலை எண்ணமா? என்பதை அவரோடு ஆறுதலாகக் கதைத்து அறிந்து கொள்ள வேண்டும்.



நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுவுடன் கூடவரும் உளப்பிரச்சினையாகச் சில வேளை மனச்சோர்வும் வருவதுண்டு. அப்படி ஏதும் இருக்கிறதா? என்று கவனிக்க வேணடும். கோபம், கவலை, ஆகிய உணர்வுகள் கடுமையாக இருக்கின்றன. அதன் செறிவு எவ்வளவு என்பதை அறிய வேண்டும்.

கர்ப்பமடைவது என்பது ஒழுங்கான திருமண வாழ்வின் பின்நடைபெறும்போதும் நெருக்கீட்டைத் தரக்கூடியது. வன்புணர்வால் வரும் கர்ப்பம், அதனோடு சேர்ந்த களங்கம், எதிர்காலம் பற்றிய பயம் இவை யாவும் நெருக்கீடுகள். கற்றலைப் பாதியில் இடைநிறுத்த வேண்டி ஏற்படுவது, வீட்டிலிருந்து புதிய சூழலுக்கு மாற்றப்படுவது, நண்பர்களையும் உறவினர்களையும் பிரிந்து வாழ்வது இவையும் தனித்தனி நெருக்கீடுகளே. இந்தச்சிறுமி சிறுவயதில், 14 வயதில் ஒருசேர வந்துள்ள பெரிய நெருக்கீட்டுத் தொகுதி ஒன்றை எதிர்கொண்டு பாதிக்கப்பட்டுள்ளாள்.

அவளுடைய கருத்தூன்றலும், ஞாபக சக்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கலாம். திரும்பவும் கல்வி கற்கும் ஒரு சூழல் ஏற்பட்டாலும் அடைவு மட்டம் குறையும் வாய்ப்பு அதிகம் உள்ளது. மற்ற மனிதர்களுடனான உறவு பெரிதும் பாதிக்கப்படலாம்.

இவரது மேற்குறித்த நிலைமையைச் சரியாக மதிப்பீடு செய்யவும் வழிகாட்டவும் இவர் ஒரு உளவைத்திய நிபுணரைப் பார்ப்பது உகந்தது. தேவையெனில் அவர்கள் மருந்து வழங்குவர். பெரும்பாலும் சம நேரத்தில் உளவளத் துணைக்கு அனுப்புவர். உளவளத்துணையாளர் "வெளிப்படுதல் சிகச்சை" யை முதலில் ஆரம்பிப்பார். அது பெரிய அளவில் உதவாவிட்டால் அறிகைச் சிகிச்சையும் உதவலாம். ஆழ்ந்த சுவாசப் பயிற்சி, உச்சாடனப் பயிற்சி, தசைத் தளர்வுப் பயிற்சி போன்ற தளர்நிலைப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவதும் நன்று. சிகிச்சையின் போது "துண்டாடப்பட்ட ஞாபகம்" ஏதாவது இருந்தால் அது கவனிக்கப்படும். இது மாறக் கூடிய ஒரு உளப்பிரச்சினை என்பது சற்று நிம்மதி தரும் விடயம். குழந்தையின் பிறப்பு, குழந்தையை யார் வளர்ப்பது, கல்வியை எப்படித் தொடருவது போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடுவதிலும் உளவளத் துணையாளர் உதவலாம்.

**கேள்வி:2.** சிறுவர் துஷ்பிரயோகங்களின் பாதிப்புக்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள் அவர்களாக செய்யக்கூடியவை எவை, என்று கூறமுடியுமா?

**பதில்:** எந்தப் பிரச்சினையையும் நடக்க முன் தடுப்பது, நடந்து முடிந்தபின் பரிகாரம் தேடுவதை விட இலகுவானது. சிறந்தது. பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமான முறையில் பல்வேறு விடயங்களையும் பற்றிப் பெற்றோர் பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும். பாலியல் தொடர்பாகவும் கதைக்க வேண்டும். பிள்ளைக்கு எட்டு அல்லது ஒனபது வயது வரும்பொழுது பூப்படைதலுக்கு பிள்ளையைத்தயார் செய்ய வேண்டும். பூப்படைதலோடு ஏற்படும் உடலியல் மாற்றங்கள், உணர்வு மாற்றங்கள், உடற்றொழிலியல் மாற்றங்களைப் பிள்ளை அறிந்திருக்க வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பாகப் பிள்ளைகளுக்கு இருக்கும் கேள்விகள், சந்தேகங்கள், ஆகியவற்றைப் பெற்றோரிடமோ அல்லது ஆசிரியர்களிடமோ கேட்கலாம் என்ற நிலை இருக்க வேண்டும். வீட்டில் அம்மாவும் பிள்ளையும் பலதும் பத்தும் மனம் திறந்து கதைக்கும் நேரம் ஒன்று இருக்க வேண்டும். பிள்ளையோடு கதைக்க அம்மாவுக்கு நேரமில்லை அல்லது அவசியமில்லை என்ற செய்தி வழங்கப் படக் கூடாது. பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியர் அல்லது உள்வளத்துணை ஆசிரியர் பாலியல் தொடர்பான சரியான, தெளிவான அறிவைப் பிள்ளைக்கு வழங்க வேண்டும்.

பொதுவாகத் தனது அந்தரங்க உறுப்புக்களை யாரும் தொட அனுமதிக்கக் கூடாது என்பதும், மருத்துவத் தேவைக்காக தொடவேண்டி இருப்பினும் இன்னொருவர் கூட இருக்கவேண்டும் என்பது பிள்ளைக்கு தெரிந்திருக்க வேண்டும். யாராவது அந்தரங்க உறுப்பைத் தொட முனைந்தால், பார்க்க முனைந்தால் அல்லது காட்ட முனைந்தால் உடனே ஒரு நம்பிக்கைக்குரிய பெரியவரிடம் சொல்ல வேண்டும் என்பது பிள்ளைக்கு கூறப்பட வேண்டும். விருப்பமில்லாத முறையில் யாரும் தமது உடலைத் தொடும் போது "தொட வேண்டாம்" என்று கூறமுடியும். என்பதையும் அதைமீறி அவர்கள் ஏதாவது செய்ய முனைந்தால் சத்தமாகக் கத்தலாம் என்பதையும் பிள்ளைக்கு சொல்ல வேண்டும். இவை எல்லாவற்றையும் ஒரே நாளில கூறவேண்டியதில்லை. இடையிடை இவற்றைப் பற்றிக் கதைக்கும்போது படிப்படியாகக் கூறிவரமுடியும். ஆசிரியர் கள், சமயத் தலைவர்கள் போன்றோர் சில வேளைகளில் இந்த வேண்டாத நடத்தையைச் செய்யக்கூடும். என்பதைப் பிள்ளைகள் அறிந்திருகக் செய்தல் வேண்டும். பிள்ளை இவ்வாறான சந்தர்ப்பங்களில் உதவி பெறக் கூடிய, தொடர்பு கொள்ளக் கூடிய அவசரஅழைப்புஎண்ணை அறிந்திருக்க வேண்டும்.

**கேள்வி:3.** சமுதாய மட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகளைக் குறைப்பதற்கு நாம் முன்வைக்கக் கூடிய பரிந்துரைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

**பதில்:** பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான விழிப்புணர்வு செயற்பாடுகளைச் சமுதாயம் முன்னெடுக்கலாம். வலம்புரி பத்திரிகையில் வருகின்ற இத்தொடர் அத்தகைய ஒரு செயற்பாடு தான். பிள்ளைகள், வீட்டை விட்டு வெளியேறி எங்கே போனாலும் அது பற்றிய விபரங்கள் பெற்றோருக்கு தெரிந்திருக்க வேண்டும். பாடசாலையில் என்ன நடக்கிறது, இணைபாடவிதான செயற்பாடுகளில் பொறுப்பாக இருப்பது யார்? அங்கே வருகின்ற பெற்றோர் யார்? என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரிய வேண்டும். அயலில் ஒரு துஷ்பிரயோகம் நடந்திருந்தால் அதைச் செய்தவர் யார் என்பது சமூகத்திற்குத் தெரிந்திருக்கும். அந்த நபர் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பதற்கு ஏனையோர் அறிவுறுத்தப்படலாம். இலக்கியங்கள், கலைகள் ஊடாகவும் பொருத்தமான செய்திகள் வழங்கப்படலாம்.

**கேள்வி:4.** குறித்த சிறுமியின் நிலை போன்று பலர் பாதிக்கப்பட்டு வெளிவராமல் அவற்றுக்கான உள ஆற்றுகை கிடைக்காமல் இருக்கின்றனர். அவர்கள் மேலும் மேலும் பாதிப்புக்குள் செல்வதற்கு வாய்ப்புள்ளதா? தீர்வு என்ன?

**பதில்:** பொதுவாகக் குற்றமிழைப்பவர்கள் *"இது இரகசியம் யாருக்கும் சொல்லக் கூடாது"* என்று கூறியிருப்பார்கள். சிலவேளை அச்சுறுத்தியும் இருக்கலாம். அதனால் பாதிக்கப்பட்டவர் யாருக்கும் சொல்லாமலிருப்பார். அப்படியிருக்கும் போது திருப்பத் திரும்ப துஷ்பிரயோகம் நடக்க வாய்ப்பு உள்ளது. ஒரு முறை நடப்பதே பெரிய நெருக்கீடு. தொடர்ந்து நடப்பது மிகப் பெரிய பாதிப்பாக அமையலாம். நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு கவனியாது விடப்பட்டால் வேறு உளப் பிரச்சினைகளுக்கு வழி விடலாம். சமூகத்தில் பொருத்தமான விழிப்புணர்வு நிலை ஏற்படுத்தப்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரச்சினை குறித்து மனம் திறக்கக் கூடும்.

**கேள்வி:5.** அடிப்படையில் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்கின்ற நபரின் உளநலம் தொடர்பில் உங்கள் பார்வை எப்படியிருக்கிறது?

**பதில்:** பாலியல் துஷ்பிரயோகம் பெண் பிள்ளைகளுக்கு மட்டும் தான் நடைபெறலாம் என்பதில்லை. ஆண் பிள்ளைகளும் பாதிக்கப்படலாம். துஷ்பிரயோகம் செய்பவரின் உளநலம் மிகச் சிறந்ததாக இருக்கமுடியாது என்பது வெள்ளிடை மலை. ஆயினும் இதுபற்றிய விளக்கத்தை ஓர் உளவைத்திய நிபுணர் மட்டுமே கூறமுடியும்.

இவர்களில் சிலர் பாரிய உளநோய் உள்ள வர்களாக இருக்கலாம். சிலர் நடுத்தர உளப்பிரச்சினைகள் கொண்டவர்களாக இருக்கலாம். இன்னும் சிலர் ஆளுமைக் குழப்பம் உள்ளவராக இருக்கக்கூடும். பெரும்பாலானவர்கள் தாங்கள் குற்றம் செய்யவில்லை என்றும் பிள்ளையின் சம்மதத்துடன் தான் நடைபெற்றது என்றும், தமக்குப் பிள்ளையில் அதிக அன்பு உண்டு என்றும் வாதிடுவர்.

ஆயினும் அது ஏற்கத்தக்கதல்ல. பிள்ளையில் அன்புள்ள ஒருவர் இப்படி ஒரு பாரிய நெருக்கீட்டை ஒரு போதும் பிள்ளைக்கு கொடுக்க மாட்டார். ஆகவே துஷ்பிரயோகம் செய்பவர்கள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவது மட்டுமன்றி உளவைத்திய நிபுணருக்கு முன்பும் நிறுத்தப்படுவது பொருத்தமானது.

**1929**
**சிறுவர் உதவிச் சேவை அவசர அழைப்பு இலக்கம்**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1, கற்பக விநாயகர்
ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

E.mail:psych@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## ஜாதகம்



வார்த்தைகளைத் தொடுத்து
கவிதைகளைப் பொழிய
நான் ஒன்றும் வைரமுத்துவோ
கண்ணதாசனோ இல்லை
நம் இளமைக் காலத்தை
கல்வி தின்றது...
இளமையின் சிறகுகளை
சாதகமாய் பதில் சொல்லும்
ஜாதகம் வென்றது
இளமையின் பூக்களை
செவ்வாய்தோசம் மலரவிடாமல்
மொட்டோடு பறித்தது
இளமையின் அழகை
பெண் பார்க்கும் வரன்கள்
ரசித்துவிட்டு...
நீண்ட கூந்தல் சப்பை மூக்கு
படிப்பு அதிகம், கட்டை,கறுப்பு
இது அவர் குற்றச்சாட்டுக்கள்
நம்வாழ்க்கைப் பாதையை
மறைக்கும் கிரகம் தான்யாது?
கிளர்ந்து வெளியேறுங்கள்
கிளியோபற்றாக்களே
இதுவரை பாத்திரத்தைத்தானே
துலக்கிவைத்தோம்
இனி...
ஜாதகத்தை தூக்கியெறிவோம்

பா.மதனபாரதி
அல்வாய்

## முதலாம் சந்திப்பு

தமிழினில் காணாத தமயந்தியை-நான்
நேரினில் கண்டேன் நெகிழ்வுடன்
வாழ்க்கையை இழந்த
யுவதியாய் அலைந்தேன்
இப்பூமிதனிலே- உன்
வருகையினால் இருள் சூழ்ந்த-என்
வாழ்க்கைக்கு ஒளி பிறந்தது
மின்மினிப்பூச்சிகள் கூட
சிலகாலங்களே வாழும்
மிதுனா நான் உன்னுடன்-ஒருநாள்
வாழ்ந்தால் போதுமடி
ஓராயிரம் ஆண்டுகள்
வாழ்ந்த இன்பத்தை
அடைந்து விடுவேன்
நியூட்டனில் உன்னைக் கண்டேன்
நிம்மதியை இழந்தேன் உன்
நினைவுகளைச் சுமந்தனால்

ஆழியூர் றஜி
வடமராட்சி கிழக்கு

## 764ல்...

பஸ்சில் பார்த்தேன்
மஞ்சள் பாவாடை தாவணியில்
பார்த்தேன்
காற்பாதங்களிலே வெள்ளி
காற்கொலுசு ஓசை நயத்தில்
நெஞ்சம் குழைந்தேன்
கையிலே உனைப் போன்ற
அழகான குடையைக் கண்டேன்
உன்கைவிரல்களில் இருந்த
மருதாணிப்பூச்சை இரசித்தேன் -நீ
கண் இமைகளை வெட்டி
விழிக்கின்றபோது- மனதிலே
பட்டாம்பூச்சிகள் பறப்பதை
உணர்ந்தேன்
நீ நெஞ்சோடு அணைத்து
வைத்திருந்த புத்தகத்தின்
முன் அட்டையில் உன்
முகவரி தேடினேன்
தபால்பெட்டி சந்தியில்
இறங்கிய போது
சாலையோர வேலிகளின்
பூமரங்களில் பூக்கள்
மலர்வதைக் கண்டேன்

ஆ.முல்லைதிவ்யன்

அறி
எதன்ஆழத்தையும்
நன்கு அறி
அதை அறியாமல்
காலைவைத்துவிட்டு
மீண்டுவரத் துடிப்பதிலும்
அறிந்துவிட்டு வை!
எதையும் எதிர்கொள்ளும்
எண்ணம்
உன்னில் வளரும்!

மாவை. நா.கஜேந்திரன்

## என்னவளே

தொட்டுப் படிக்காத தொடர்கதையே
ஏனம்மா... என்னைவிட்டு விலகி
வெகுதூரம் நிற்கின்றாய்
பிரிவுக் கவிதைகளை எழுதி
இந்த ஏழைமகன்
ஏங்கித் தவிக்கட்டும் என்றா...
வெகுதூரம் நிற்கின்றாய்...
வாயில்லை கண்ணீரை வார்த்தைகளாக
கொட்டி கவிவடித்தேன்- அதை
பார்க்க நீ வரவில்லை...
எங்கும் உன் அன்பு ரசப் பிஞ்சு முகம்
என் மடிமீது மலர்ந்த வண்ணமுள்ளது

ந.அனந்திகா
நீர்வேலி

# மௌனத்தின் தேடல்- 233



## தனிமையின் துணை

தனிமையின் ஓவியம்
துணையின் இலக்கணம்
இன்மையின் பரவசம்
எதிர்பார்ப்பின் இமயம்
எதிர்நீச்சலின் ஆரம்பம்
எதிர்காலத்தின் கனவுகள்
விதி தன்னை வென்று
கனவு நனவாகிட வேண்டும்

பி.வேதிகா
வ/கனகராயன்குளம் ம.வி

## துன்பம்

உண்மை உறவுகள் யாருமின்றி
வேளை ஒரு உணவுக்காய்
காலையின்றி மாலையின்றி
சாலைகளே சந்நிதியாய்
என் துணை நீயாக
உன் துணை நானாக
எம் நிலை தெரியாமல்
முகத்திலே புன்முறுவலுடன்...

ந.கௌரிராஜ்
கிளி/ பிரமந்தனாறு ம.வி

## துயர் தீர்த்திடுவீர்

உறவுகளை இழந்த சோகம்
கவலை கவ்வ
மலையக மண் சரிவின் அனர்த்தம்
நினைவில் வாட்ட
இனம்புரியாத அச்சம்
ஆட்டிப் படைக்கும்
இச்சிறுவர்களின் துயர் தீர்த்திட
அனுதாபிகள் மனிதாபிமானிகள்
எழுந்திடுவீர் துயர் தீர்ப்பீர்

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## தலை வணக்கம்

தனிமையில் இனித்த பார்வையுடன்
காத்திருக்கும் பாலகி உன் கண்களில்
தெரியும் கனவின் வழித்தேடலில்
ஒளிதெரிவது உன் விழிகளில்
தெரிகிறது- உயிர் பெற்ற
அன்னை தெரேசாவாய்
உன்னைக் காண்கின்றேன்
உனக்கு என் தலை வணக்கம்

கணேசமூர்த்தி நிராஜ்
பொலிகண்டி தெற்கு

## தேடல்

பார்வையை வழிமேல் வைத்து
பல்லாயிரம் எண்ணங்களை
மனதில் வைத்து
தேடலுடன் காத்திருக்கும்
பாலகி உன்
காத்திருப்புக்கான
பதில் கிடைக்கும்
நாள் விரைவில் தன்மையின்
துயரம் தலை மூழ்கும்
நாள் உன் அருகில்

துஷாந்தி சுதாகர்
கற்கோவளம்

## இப்படியும் ஓர் அவலம்

பிரமன் அவன் படைப்பாலே
படைக்கப்பட்ட உயிர்கள்
அரக்கன் அவன் செயலாலே
பெற்றவளை உற்றாரை இழந்து
பத்திரமாய் பார்ப்பதற்கு யாருமின்றி
பசிபோக்க நாதியின்றி
தவிக்கும் அவலம்

த.பிரியா
கிளிநொச்சி

## இயற்கையின் ரசிகை

குருவி குஞ்சை அணைக்கும்
சின்னப் பெண்ணின் ஈர இதயமோ
தீவிர ரசிகையானது
இயற்கையின் படையல் மீது!

அராலியூர் சோ.சிவகுமாரன்

## உத்தரவாதம்

ஒரு கழுகுக்கோ
ஒரு காமுகனுக்கோ
இரையாகலாம் இந்த
வெட்டவெளிக் குஞ்சுகள்

சே.நித்தியா, தும்பளை

## யார்?

சுதந்திரக்கிளியாய் பறக்க
வேண்டிய உன்னை
சிறகொழந்த பறவைபோல
இவ்விடத்தில்
சிறை வைத்தது யார்?
சின்னக்கிளியே!
சிரிப்புக் கதைகள் பல
சொல்லி உன்சித்தம்
கலங்க வைத்து
உன்னை திசைமாறச்
செய்திடுவர் இதற்கு சிறிதும்
இடம்கொடாமல்
நீ சீற்றம் கொண்டு எழுந்துவிடு
சீரானபாதையில் சென்று விடு

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## யாரிடம் சொல்லி அழ

ஓடி விளையாடும் வயது
யாரை இவள் எதிர்பார்த்து
ஏக்கமுடன் காத்திருப்பு
பெற்ற உறவுகள் இல்லையெனில்
இவள் யார் நாமம் சொல்லி அழ
தெய்வம்தான் இக்கதிக்கு ஆளாக்கியது
மாளிகையில் நாளொரு விருந்து
குதூகலம் கொண்டாட்டம்
தலைவர்கள் கேட்பது பத்திரிகை செய்தி
நடக்குமென்பார் நடக்காது

ம.திருவரசுராசா
வவுனியா

## பூந்தளிர் ஒன்று

ஈழத்தாய் பெற்றெடுத்த சின்னப்பூவே-உன்
வாழ்வில் நெருப்பை கொட்டியவர்
நெஞ்சம் இல்லாதவர்
நெருப்பைத் தணிக்க
ஐந்தறிவு ஜீவன் உன் அருகில்
இதுதான் உலக நியதியா?

எம்.ரி.தனுஷனன்
மகாதேவா ஆச்சிரமம்

# மௌனத்தின் தேடல் -234



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.12.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினிமாவில் 12 ஆண்டுகளைக் கடந்த த்ரிஷா!

செம்ம ஹேப்பியில் இருக்கிறார் த்ரிஷா. திரையுலகப் பிரபலங்கள் அனைவரும் த்ரிஷாவை வாழ்த்து மழையில் நனைக்கின்றனர். த்ரிஷா சினிமாவுக்கு வந்து 12 வருடங்கள் ஆனதுதான் வாழ்த்துக்களுக்குக் காரணம். பொதுவாக சினிமாவில் ஹீரோயின்களுக்கான ஆயுட்காலம் குறைவுதான்.

ஒரு ஹீரோயின் நான்கு வருடங்கள் சினிமாவில் நீடிப்பதே ஆச்சர்யம். ஆனால், த்ரிஷா 12 ஆண்டுகளைக் கடந்து வந்திருப்பது பெரிய விஷயம்.

**த்ரிஷாவின் சினிமா என்ட்ரி :**

த்ரிஷா 1999 இல் சென்னையில் நடந்த அழகிப் போட்டியில் 'மிஸ் மெட்ராஸ்' ஆகத் தேர்வானார். அது த்ரிஷாவின் சினிமா என்ட்ரிக்கு முதல் புள்ளியை ஆரம்பித்து வைத்தது. பிரவீன் காந்த் இயக்கிய "ஜோடி" படத்தில் சின்ன கரக்டரில் நடித்தார் த்ரிஷா.

பிரசாந்த், சிம்ரன் நடித்த இப்படம் பெரிய வெற்றியைப் பெற்றது. ஆனால், த்ரிஷாவின் கரக்டர் ரொம்பவே சிறியது. சிம்ரனின் தோழியாக ஒரே காட்சியில் நடித்திருப்பார். அதற்குப் பிறகு வாய்ப்புகள் வரிசை கட்டி நிற்கவில்லை. இந்நிலையில், ப்ரியதர்ஷன் இயக்கத்தில் ஷாம், மாதவனுடன் "லேசா லேசா" படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆனார். ஆனால், அந்தப் படம் ரிலீஸ் ஆவதற்குள் "மௌனம் பேசியதே", "எனக்கு 20 உனக்கு 18" ஆகிய படங்களில் நடிக்க ஓ.கே சொன்னார். இதில் "மௌனம் பேசியதே" படம் டிசம்பர் 13, 2002ல் ரிலீஸ் ஆனது. த்ரிஷா ஹீரோயினாக நடித்து ரிலீஸ் ஆன முதல் படம் இதுதான்.

ஹரி இயக்கத்தில் விக்ரமுடன் நடித்த "சாமி" படம் த்ரிஷாவைக் கொண்டாட வைத்தது. அதற்குப் பிறகு வெளிவந்த "கில்லி", "திருப்பாச்சி", " ஆறு", "கிரீடம்" படங்கள் கமர்ஷியல் ஹீரோயினுக்கான அங்கீகாரத்தைக் கொடுத்தன.

"அபியும் நானும" படம் த்ரிஷாவுக்கும் முக்கியமான படமாக அமைந்தது. கௌதம் மேனன் இயக்கிய "விண்ணைத் தாண்டி வருவாயா" படம் த்ரிஷாவின் சினிமா கெரியரில் பெரிய திருப்புமுனையைக் கொடுத்தது. அதற்குப் பிறகு கமலுடன் "மன்மதன் அம்பு" படத்தில் நடித்தார்.

"மங்காத்தா" ஹிட்டுக்குப் பிறகு தற்போது மீண்டும் அஜித் படத்தில் நடிக்கிறார். கௌதம் மேனன் இயக்கும் படம், அஜித் நடிக்கும் அட்டம் என்பதால் "என்னை அறிந்தால்" படம் த்ரிஷாவுக்கு ரொம்பவே ஸ்பெஷல்தான்.


"ஜெயம்" ரவியுடன் "பூலோகம" படம் ரிலீஸ்"க்கு வெயிட்டிங். சுராஜ் இயக்கத்தில் "ஜெயம" ரவியுடன் நடிக்கும் "அப்பாடக்கரு" படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழுக்கு நிகராக தெலுங்கிலும் நடித்த த்ரிஷா ஒரு இந்திப் படத்தில் மட்டும் அக்ஷய் குமாருடன் நடித்திருக்கிறார். சமீபத்தில் கன்னடத்தில் புனித் ராஜ்குமாருடன் நடித்த "பவர்" படம் பட்டையைக் கிளப்பியது.

கமல், விஜய், அஜித், சூர்யா, விக்ரம், ஆர்யா, விஷால் , "ஜெயம்" ரவி, ஜீவா, சிம்பு, ஸ்ரீகாந்த், ஷாம், சித்தார்த் என்று முன்னணி ஹீரோக்களுடன் நடித்த த்ரிஷா இன்னும் பல ஆண்டுகள் சினிமாவில் நீடிக்க நாமும் வாழ்த்துவோம்!



# லிங்கா வசூல் பிரச்சினைக்கு பதில் அளித்த கே.எஸ். ரவிக்குமார்



சமீபத்தில் டிஸ்டிபியூட்டர் பிரச்சினைகளை கேள்வி பட்டேன். அதுக்கும் எனக்கும் சம்பந்தமே கிடையாது. ஆனால் வேறு சிலர் மூலமாக நான் விசாரித்ததில் அவர்கள் யார் என்றே தெரியாது. சில டிஸ்டிபியூட்டர்கள் பணம் பாக்கி வைத்துள்ளனர் என்று கூறுகின்றனர். நான் சிட்டி டிஸ்டிபியூட்டர்களிடம் கூட விசாரித்தேன், அவர்கள் இன்று இருந்து வரும் செவ்வாய்க்கிழமை வரை புக்கிங் புல் என்று கூறுகிறார்கள்.

மேலும் ஒருவர், தேர்வுகள் அப்போ படம் ரிலீஸ் செய்தால் எப்படி வசூல் வரும் என்று கூறுகின்றார். ரஜினி அவர்களின் பிறந்தநாள் அன்று படத்தை வெளியிடுவதற்காக நாங்கள் அப்படி கடுமையாக பணிபுரிந்தோம். இதுதான் என்னுடைய பணி. படம் இயக்கியதோடு என் பணி முடிந்தது, இதுபோன்ற தகவலை தயாரிப்பாளர்களிடம் கேட்டால் முழுமையான விபரம் தெரியும்.

படம் ரிலீஸாகி இப்போது தான் இரண்டாவது வாரம் தொடங்க இருக்கிறது. இதற்குள் வசூல் ஆகவில்லை என்று எப்படி சொல்வார்கள். 100 நாட்கள் ஓடி வசூல் வரவில்லை என்று கூறினால் ஒரு நியாயம் உண்டு. இதற்குள் எப்படி அவர்கள் இதுபோன்ற பேச்சுகளை கூறலாம் என்று கடுமையான பதிலை அளித்துள்ளார் கே.எஸ். ரவிக்குமார்.


# அனுஷ்காவின் அர்த்தமுள்ள ஆசை!



'லிங்கா' படத்தின் வெற்றி அனுஷ்காவை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. தெலுங்கில் 'பாகுபாலி', 'ருத்ரமாதேவி', தமிழில் அஜித்துடன் 'என்னை அறிந்தால்' என 2015ஆம் ஆண்டும் தனக்கான ஆண்டாக இருக்கும் என்பதால் அனுஷ்கா உற்சாகத்தில் இருக்கிறார். இந்நிலையில் "லிங்கா" புரமோஷனில் கலந்துகொண்ட அனுஷ்கா சில கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார். சீஸனில் கிடைக்கும் பழங்கள் மாதிரிதான் நடிகைகள். ஒரு சீஸனில் ஒரு நடிகை என்றால், இன்னொரு சீஸனில் மற்றொரு நடிகை.

என்னைப் பொறுத்தவரை வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக எடுத்துக் கொள்கிறேன். முதல் இடம் குறித்த ஆசையெல்லாம் இல்லை. சாவித்ரி, வாணிஸ்ரீ, ஜெயசுதா, ஜெயப்பிரதா போன்ற பழைய நடிகைகளை, இன்றைக்கு உள்ள சிறுவயது பசங்ககூட அடையாளம் கண்டுகொள்கிறார்கள். அவர்கள் காலத்தில் இப்போதுபோல் தகவல் தொழில்நுட்பங்கள் கிடையாது. ஆனாலும், இன்றும் அவர்கள் கரக்டர்கள் பேசப்படுகின்றன. ஆனால், என்னையோ இப்போதைய மற்ற நடிகைகளையோ ரசிகர்களுக்கு அவ்வளவாக அடையாளம் தெரியவில்லை. டிவி, இணையதளம், முகநூல் என இருந்தும் கூட அவர்கள்போல் ரசிகர்கள் மனதில் இடம் பிடிக்க முடியவில்லை. சாவித்திரி, வாணிஸ்ரீ போல் நல்ல கரக்டர்களில் நடித்துப் பெயரெடுக்க வேண்டும் என்பது என் ஆசை" என கூறியுள்ளார் அனுஷ்கா .

# ஐஸ்வர்யா ராய், ரன்பீர் கபூர் நடிக்கும் 'ஏய் தில் ஹை முஷ்கில்' !



தர்மா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் கரண் ஜோஹர் இயக்கத்தில் உருவாக உள்ள படம் 'ஏய் தில் ஹை முஷ்கில்'.

இந்த படத்தில் ஐஸ்வர்யா ராய், ரன்பீர் கபூர் , அனுஷ்கா ஷர்மா நடிக்கின்றனர்.

ஜூன் 3, 2015ல் இந்தப் படத்தின் வெளியீட என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கரண் ஜோஹர் இயக்கத்தில் இது 7ஆவது படமாக இருப்பினும் ஐஸ்வர்யா ராய், ரன்பீர், அனுஷ்கா ஷர்மாவை இயக்கப் போவது இதுவே முதல் முறை.

இப்படத்திற்கு ப்ரிதம் இசையமைக்கிறார் .

காதல் மற்றும் உறவுகள் குறித்த ஆழமான பதிவாக இப்படம் இருக்கும் என்று இயக்குநர் கரண் ஜோஹர் தெரிவித்துள்ளார்.



பூஜா


## விஜய்யின் அடுத்த பட தலைப்பு?

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் , ஹன்சிகா, ஸ்ருதி ஹாசன் , ஸ்ரீதேவி, சுதீப் நடிக்கும் படத்திற்கு இப்போது வரை இன்னும் பெயரிடப்படவில்லை.

முதலில் சிம்புதேவன் தனுஷை வைத்து இயக்குவதாக இருந்த படத்தின் தலைப்பு 'மாரீசன்' எனவும் அந்த பெயர்தான் இந்தப் படத்துக்கு வைக்கப்படலாம் எனவும் சொல்லப்பட்டது.

பிறகு, ' கருடா' என்ற டைட்டில் பரிசீலிக்கப்பட்டதாக கிசுகிசுக்கப்பட்டது. ஆனால், அதுவும் உண்மை இல்லையாம். தற்போது 'மருதீரன்' என்ற டைட்டில் வைக்க ஆலோசித்து வருகிறார்களாம். என்னும் இதுகுறித்து இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் ஏதும் இன்னும் வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 26

…அதுவரைக்கும் கட்டிவச்சிருந்த கண்ணீரு கயித்த அத்திருச்சுகேன்னு அழுகையில கூடிட்டா பெரிய மூக்கி.

எம்பொழப்பு பாதியில போச்சு… எம் பொண்ணு பொழப்பு ஆதியிலயே போச்சே…

யம்மா தங்கச்சி பெரியமூக்கி! அழுகைய நிறுத்து தாயி. இது ஊருக்கு ஊரு உண்டானதான.

பத்துக்கு ரெண்டு பழுதாகறதில்லயா? வேணாம்ன்னு போறவன் விக்கிரமாதித்த மகராசனாயிருந்தாலும் நமக்கு எதுக்கு? போனாப் போயிட்டுப் போறான்.

நாங்கள்லாம் இல்லையா நல்லது கெட்டதுக்கு.

அடுத்து ஆக வேண்டியதப் பாரு.

வளவிக்காரச் சுப்பஞ்செட்டியாரு பெரிய மூக்கியத் தேத்தித் தெளிய வைக்கிறாரு.

தகப்பன் சடையத் தேவரும் மகன் கட்டையனும் ஒருத்தர ஒருத்தர் பார்த்து மீசைக்குள்ள பெரிசு சிரிக்க, செயிச்சானா இல்லையான்னு இடுங்குன கண்ணுல அவன் ஒரு பார்வ பாக்க, ஊராளுக இந்த நாடகத்தப் பாக்கிறதுக்குள்ள தலைய வேற பக்கம் திரும்பிக் கிட்டாக ரெண்டு பேரும்.

இங்க நடக்கிறகூத்துக்கும் தனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லேங்கிற மாதிரி கண்ணச் சிமிட்டாம ஒக்காந்திருக்கா கருவாச்சி.

சரி….

அவரவர் பொருளு அவரவருக்குப் போய்ச் சேந்துட்டாப் பஞ்சாயத்து முடிஞ்சிருமப்பா.

அதப் பேசி முடிங்க முதல்ல.


அம்மைய நாயக்கரு சத்தம் போட்டுச் சொன்னதும் கலையப் போன பஞ்சாயத்து ஒக்காந்திருச்சு திரும்பவும்.

மொதல்ல பிராது குடுத்தவன் கட்டையானா இருப்பதானால் பொருளத் திருப்பத் தரவேண்டிய பொறுப்பு அவனுக்குத்தான்.

பெரிய மூக்கி நீ சொல்லாத்தா.

நீ என்னென்ன சீர் செஞ்சயோ … சொல்லித் திருப்பி வாங்கிக்க.

அது வரைக்கும் பொலம்பிக்கிட்டேயிருந்த பெரிய மூக்கி வெவரமாயிட்டா.



அழுகையத் தூக்கி அங்கிட்டு வச்சுட்டுச் சீர் செஞ்ச பொருளையெல்லாம் மனக்கணக்குலேயே ஓட்டிப் பாத்து ஒப்பிக்கிறா.

ஒரல் ஒண்ணு…
ஒலக்கை ஒண்ணு…
ஒரல்மூடிஒண்ணு…
அண்டா ஒண்ணு…
தண்ணிக் கொடம் ரெண்டு…
குன்டாச்சட்டி ஒண்ணு…
கும்பா ஒண்ணு…
ஒலவெட்டி ரெண்டு….
அம்மி திருகை, அருவாமண ஒவ்வொண்ணு…
காமச்சி வெளக்கொண்ணு….
சொளகு ஒண்ணு…
பாய் ஒண்ணு…..
தலகாணி ரெண்டு….

வெளக்குமாறு வாங்கி வைச்சேன் ஆனா அது சீர்ல சேர்றதில்லன்னு சத்தம் போட்டுச் சொன்னவ இனிமேதான் குடுக்கணும்ன்னு கீழ் கொரல்ல முனகிக்கிட்டா.

கேட்டுக்கிட்டியாப்பா செஞ்ச சீர் எல்லாம் ஒப்படைச்சிரு பஞ்சாயத்துல.

காவக்காரச் சக்கணன் உத்தரவு போட்டாரு கட்டையனுக்கு.

ஏன் ஒப்படைக்கணும் ? கல்யாணச் செலவு நான்தான் பண்ணியிருக்கேன்.

கழிச்சிட்டுப் போறேன்.

கட்டையன் எகத்தாளமாகச் சொல்லுவும் மொதலக்கம்கட்டி ஆளுக கையக்கால ஒதறி எந்திருச்சிட்டாக.

அவ வாழ்ந்த பங்கு கேட்டாக் குடுக்கணுமா இல்லையா அதுல கழிச்சுட்டுப் போ. பொழுதிருக்கப் பொருள் வந்து சேராட்டிப் பொழுசாய நீ இருக்கமாட்ட.

யாரப் பாத்துடா கை நீட்டிப் பேசுறீக… ஆடுகளவாணிப் பயலுகளா.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

…ஒவ்வொரு கணமும் நமது எதிர்பார்ப்புகளை வெளியுலகில் நிஜமாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மக்கள் நம் கற்பனை செய்த முறையில் எதிர்ச்செயல் புரியவில்லை என்றாலோ அல்லது தக்க பதில் கொடுக்கவில்லை என்றாலோ நாம் ஏமாற்றப்பட்டதாக உணர்கிறோம். சின்னச் சின்ன விடயங்களிருந்து பெரிய விடயங்கள் வரை எப்பொழுதும் அது நமது கற்பனையுடன் பொருந்தி வருகிறதா என்று பார்க்கிறோம். இது நமக்குள் ஒரு விழிப்பற்ற செயலாக இருப்பதால் நமது மன இறுக்கத்தின் காரணத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. காரணம் அனைத்திலும் மிகவும் நுட்பமாக பின்னப்பட்டிருப்பதால் அதை வெளிப்படுத்த முடியவில்லை.

## கவலைகள் இன்றி வாழ்தல்!

நீங்கள் இந்த விடயத்தில் கூர்மையான விழிப்புணர்வைக் கொண்டு வந்து உங்களைச் சில மணி நேரங்கள் கவனித்தீர்களானால் உங்களுடைய முழு மனமும் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் மனதையும் உங்களைச் சுற்றியிருக்கும் மனிதர்களையும் கவனிப்பவராக இருப்பதென்று தீர்மானியுங்கள். உங்கள் பார்க்கும் அல்லது செய்யும் ஒவ்வொரு சின்ன விடயங்களிலும் தொடர்ந்து எதிர்ப்புகளை உருவாகிக் கொண்டே இருக்கிறது என்பதையும் அது எவ்வாறு சில சமயங்களில் தவறிவிடுகிறது என்பதையும் காண்பீர்கள்.

இந்த விடயத்தில் முழுவதும் மிகுந்த விழிப்புணர்வை செலுத்துவதன் மூலம் உங்கள் மனம் எவ்வாறு விளையாடுகிறது. எவ்வாறு மன இறுக்கத்தை உருவாக்கிறது என்பதைப் புரிக்க முடியும். ஒருமுறை கவனிப்பவராக இருக்க கற்றுக்கொண்டு வீட்டீர்களானால் உங்கள் கவலைகள் குறைந்துவிடும். வெளியுலக நிகழ்ச்சிகளை உள்ளே எடுத்துச் செல்லும்போதுதான் நீங்கள் உங்களுக்குள் ஒரு பெரிய தகவல் அடித்தளத்தையே உருவாக்கி விடுகிறீர்கள். அதிலிருந்து புதிய கவலைகள் எழுகின்றன.



மேலும் ஒரு விடயம்… கால வரிசைப்படி திட்டமிட்டு அதை மெய்யாக்க கால விரயமின்றி உழைப்பீர்களானால் நீங்கள் உண்மையின் பாதையில் இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் எந்தவித முன்னேற்றமும் இன்றி வேலை செய்வதைவிட கவலைப்படுவது அதிகமாக இருந்தால் அப்பொழுது நீங்கள் இருக்கும் பாதையில் உண்மைக்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி இருக்கிறது. அது உங்களுக்குள் நோக்கி உங்கள் எண்ணங்களை நேராக்கிக் கொள்ள வேண்டிய நேரம்.

### ஆன்மீகம் 111

கால வலிசைப்படி திட்டமிடுங்கள். சரிதான் ஆனால் உங்கள் திட்டத்தை எவ்வாறு செயற்படுத்தப் போகிறீர்கள் என்று நினைப்பதுதான் சரியற்றது. இதை உளவியல் திட்டம் எனலாம்; இதுவே மன இறுக்கத்தையும் கவலையையும் உருவாக்கிறது.

உங்களுக்குத் திட்டமிடுவதற்கு 2 மணி நேரம் தேவைப்பட்டால் மீதி 22 மணி நேரம் அதைச் செயற்படுத்துவதற்குக் கிடைக்கிறது. பிறகு ஏன் அது செயற்படுத்துவதில்லை? ஏனெனில் நீங்கள் அதில் 80% நேரத்தை எப்படி உங்கள் திட்டத்தை செயற்படுத்தப் போகிறீர்கள் என்ற கவலையிலேயே வீணாக்கி விடுகிறீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த குடும்பங்களுக்கு உதவிகள்

(கண்டாவளை)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபா விசேட நிதியில் இருந்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாமல் இருந்த குடும்பங்களின் நன்மை கருதி 413 குடும்பங்களுக்கு பசுமாடுகளும் 312 குடும்பங்களுக்கு ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

50 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட பசு மாடுகளும் 21 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த ஆடுகளுமே இக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 198 பசு மாடுகளும் 154 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 79 பசுமாடுகளும் 102 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 74 மாடுகளும் 44 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 62 பசுமாடுகளும் 52 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தரினால் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியாதிருந்த குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளினால் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கான வளர்ப்பு தொடர்பான அறிவூட்டல் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டதுடன் பயனாளிகளின் வீடுகளுக்கு சென்று தொட்டில்கள் அமைப்பது தொடர்பான அறிவுரைகளும் வழங்கப்பட்டன. அதேநேரம் பயனாளிகளுக்கு புல் நாற்றுக்களும் அவற்றை வளர்ப்பது தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகளை பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-263)

## பேராசிரியர் க.கைலாசபதியின் 32 வது நினைவுக்கருத்தரங்கு

வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தும் பேராசிரியர் க.கைலாசபதியின் 32 ஆவது நினைவுக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைரவப். சி.ஏ.ஒழுங்கை வவுனியாவில் அமைந்துள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத்தில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பேராசிரியர் க.கைலாசபதியின் விமர்சனப் பார்வை எனும் தலைப்பில் வ/இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி கங்கைவேணி அமிர்தலிங்கம் கருத்துரையினை வழங்குவார்.

எழுத்தாளர் தமிழ்மணி கே.கே. அருந்தவராஜா (மேழிக்குமரன்) தொடருரையினை ஆற்றுவார். கலை நிகழ்ச்சியாக நீர்வளம் காப்போம் எனும் தலைப்பில் வில்லுப்பாட்டு நடைபெறும். எனவே இந்நிகழ்வில் கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2)

# வைத்தியரை இடமாற்றம் செய்ய முற்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா, பாவற்குளம் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியரை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி இடமாற்றம் செய்ய முற்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் பாவற்குளம் பிரதேச வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர.

இந்த விடயம் தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில்.

, பாவற்குளம் பிரதேச வைத்தியசாலையில் கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் அவை மிகவும் மோசமாகவுள்ளதாகவும் கட்டுமானத்தில் பல தவறுகள் உள்ளதாகவும் பிரதேசவாசிகள் அண்மையில வைத்தியருக்கு சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனையடுத்து வைத்தியர் ஒப்பந்தகாரர்களிடம் வேலைகள் சீரில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர் என தெரிவித்திருந் தார்.

இதனையடுத்து ஒப்பந்தகாரர் வைத்தியரை தாக்க முற்பட்டிருந்த போது சிகிச்சைக்காக சென்றிருந்தவர்கள் அதனை தடுத்திருந்தனர்.

எனினும் கடந்த புதன்கிழமை வைத்தியசாலைக்கு வருகை தந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒப்பந்தகாரர்களுக்கு சார்பாக செயற்பட்டுள்ளார். இரவு-பகல் பாராது மக்களுக்கு சேவையாற்றும் வைத்தியரை பாடசாலை ஆசிரியர் மாணவனை வகுப்பறைக்கு வெளியில் விடுவது போல் வைத்தியசாலைக்கு வெளியே விட்டு வைத்தியரின் அறையை பூட்டி அராஜகம் செய்துள்ளார்.

எனினும் பிரதேசவாசிகள் உடன் வைத்தியசாலைக்கு வந்து வைத்தியரை அவரது கடமையை செய்ய விடுமாறு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரை கோரியிருந்தனர்.

இந்த நிலையில் தொடர்ந்தும் எமது வைத்தியசாலையின் வைத்தியரை இடமாற்றம் செய்வதற்கும் ஒப்பந்தகாரர்களுக்கு சார்பாக செயற்படவும் அதிகாரிகள் முனைகின்றனர். அதனை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம் என தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பணி செய்யும் வைத்தியரை இடமாற்றம் செய்யாதே, மூவின மக்களுக்கும் சேவை செய்யும் வைத்தியரை அவமானப்படுத்தாதே, ஒப்பந்தகாரரே உங்கள் பணியை சீராக செய், சுகாதார அமைச்சரே வைத்தியசாலையின் தரம் உயர்த்து என்ற சுலோகங்களை தாங்கியிருந்ததுடன் கோஷங்களையும எழுப்பியிருந்தனர். (2-250)




## கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கலைஞர்களுடனான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேற்படி கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-277)

## நூற்றுக்குமேற்பட்டோர் ஆ.அ.அட்டை பெற்றுள்ளனர்

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம், ஆட்பதிவு திணைக்களம் மற்றும்தேர்தல்கள்திணைக்களம்ஆகியனஇணைந்து ஏற்பாடு செய்த தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை கடந்த 18 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகங்களில் இடம்பெற்றன.

அடுத்தாண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஆள் அடையாள அட்டை இல்லாத, அடையாள அட்டை தெளிவில்லா தவர்கள், உரிய ஆவணங்களின்றி அடை யாள அட்டை பெற முடியாத பல நூற்றுக்கணக்கான மக்கள் இதனூடாக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டனர். (2)

# விடுதலைப்புலிகளின் அழிவிற்குப் பின்னர் நாட்டில் பேரினவாதம் தலையெடுத்துள்ளது

### வடமாகாண சபை உறுப்பினர் சிவமோகன் தெரிவிப்பு

வன்னி யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் நாட்டில் விடுதலைப்புலிகள் முற்றாக இல்லை. அழிக்கப்பட்டார்கள் என்று அரசு கூறி வருகின்றது. அதன்பின் சிறுபான்மை என்ற இனங்களை ஓர் பொருட்டாக மதிக்கவில்லை என வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

போர் முடிந்து ஐந்தாண்டுகள் கடந்த பின்னும் பேரினவாதக் கட்சிகளான சிகல உறுமய, பௌத்த ஐக்கிய முன்னணி,பொதுபல சேனா (இது 2012 இலேயே தோற்றம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது) போன்ற இன்னும் பல கட்சிகள் நாட்டில் ஓர் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விடவில்லை. இனியும் இவை ஏற்படுத்த விடுமா என்பது சந்தேகமே.

புத்தரின் போதனையை பின்பற்றும் சமயத்தில் பௌத்த துறவிகள் அரசியலில் ஈடுபடுகின்றமை இலங்கையிலேயே காணக்கூடியதாகவுள்ளது. ஆசையைத் துறந்தவர் புத்த பெருமான் ஆசையைத்துறக்கச் சொன்னவரும் அவரே. அவரின் பஞ்சசீலக்கொள்கையை பின்பற்றுகின்றோம் எனச் சொல்லும் இவர்கள் இன்று நம் நாட்டில் இன நல்லிணக்கம் மற்றும் சிறுபான்மையினருக்கு ஓர் நிரந்தர தீர்வு கொடுக்கப்பட்டு விடக்கூடாது என்ற விடயத்தில் உன்னிப்பாக நிற்கின்றனர். அன்று தொட்டு இன்று வரை இதற்கு எவ்வளவோ உதாரணங்களை கூறலாம். பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்ற இன்னும் எத்தனையோ ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வர விடாமல் கிழித்தெறிய காரணமாக இருந்தன.

இன்றைய நிலைப்பாட்டில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதியும் சரி அல்லது பொது வேட்பாளரும் சரி இன்று இக்கட்சியினருடன் இணைந்து கொண்டு நிற்கின்றமை சிறுபான்மையினரின் அடுத்தகட்ட நிலையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இன்று இரு கட்சிகளும் சிறுபான்மையினரின் ஆதரவு வேண்டாம். இது சிறுபான்மையினருக்கு இலங்கையில் எதுவும் இல்லை என்கிற நிலையைக் காட்டுகின்றது.

புத்தரின் கொள்கைகளை பின்பற்றுகின்றோம்எனக்கூறிக்கொள்ளும்இக்கட்சியினர்தாங்களாகவே முன்வந்து நாட்டில் சுபீட்சம் பிறப்பதற்கு உழைக்க வேண்டியவர்கள், ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டியவர்கள் நாட்டில் சிறுபான்மையினருக்கு எதுவுமே சென்று சேரக்கூடாது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். பழைய கசப்பான அனுபவங்களை கூட ஆட்சியில் உள்ள அரசு மீட்டுப்பார்க்க தவறி வருகின்றது.

எனவே சிறுபான்மையினத்தவர்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒட்டு மொத்த நாட்டின் அமைதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவாது என்பதை சிங்கள மக்களும் அரசும் புரிந்து கொண்டு பேரினவாதக் கட்சிகளின் கூட்டுறவை உடைத்து நாட்டின் ஏற்றப்பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்றார். (2)



பூநகரி பிரதேச செயலகப் பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் தின விழா கடந்த 19 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நன்றே, பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையே உள்ள அந்த ஒன்றுதான் கெட்டது. ஸ்பானிய பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இனப் பிரச்சினை தீராத புதிய தேசம் சாத்தியப்படுமா?

நூறு நாளில் புதிய தேசம் என்ற தொனிப்பொருளில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் நூறு நாட்களில் இலங்கையை புதிய தேசமாக மாற்றும் திட்டங்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அவர்களால் மகிந்த சிந்தனை வெளியிடப்பட்டு தற்போது அது நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் நூறு நாள் வேலைத்திட்டத்தின் ஊடாக, புதிய தேசமாக இலங்கையை மாற்றியமைத்தல் என்ற திட்டம் மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனமாக முன்மொழியப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளைப் பொறுத்தே தேர்தல் விஞ்ஞாபனங்களின் அமுலாக்கம் பற்றிக் கூறமுடியும் என்பதால் அதுபற்றி நாம் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும்.

எனினும் இலங்கையை புதிய தேசமாக மாற்றுவோம் என்று கூறுவோரும் மகிந்த சிந்தனையின் கீழ் நாட்டை நவீனமாக்குவோம் என்று கூளுரைப்போரும் நாட்டின் அமைதி நிலை குறித்து இம்மியும் கவனம் கொண்டிலர்.

உண்மையில் ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டில் நிலவக்கூடிய சமாதானம், அமைதி, இன ஒற்றுமை என்ற அடிப்படைகளில் தங்கியுள்ளன.

இருந்தும் இலங்கை ஆட்சியாளர்கள் இன ஒற்றுமை, சிறுபான்மை இனத்தின் வகிபங்கு பற்றி ஒருபோதும் கவனம் செலுத்துவது கிடையாது.

பெரும்பான்மையினம் நினைத்தால் எதுவும் செய்யலாம் என்ற நினைப்பிலேயே எந்தத் திட்டமும் தயார் செய்யப்படுகின்றது. அந்த வகையிலேயே பெரும்பான்மை இனம் சார்ந்த அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் அமைந்துள்ளன.

சிறுபான்மை இனம் பற்றிக் கவலை கொள்ளாத ஒரு அரசால் எங்ஙனம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கேள்வி எழுவது நியாயமானதாயினும் பெரும்பான்மை இனத்தின் அரசியல் போக்கு சிறுபான்மை பற்றி நமக்கு எந்தக் கவலையும் கிடையாது என்பதாக இருப்பது வேதனைக்குரியது.

நூறு நாட்களில் இந்த நாட்டை புதிய தேசமாக மாற்றுவோம் என்ற தொனிப் பொருளில் அமைந்த மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் சாத்தியமாகலாம். ஆனால் நூறு நாட்களில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு; சிறுபான்மை மக்களையும் கைகோர்த்து இந்த நாடு புதிய தேசமாக்கப்படும் என்ற வாக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதன்மைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இதை விடுத்து நூறு நாட்களில் கட்டி எழுப்பப்படும் புதிய தேசத்திலும் பௌத்த பிக்குகள் மதவாதம் பேசினால், பௌத்தமும் சிங்களமுமே இந்த நாட்டின் ஆட்சி மதமும், ஆட்சி மொழியும் என்று மார்தட்டினால் நிலைமை என்னாவது?

எனவே, யார் வேண்டுமானாலும் எந்த விஞ்ஞாபனங்களையும் கொண்டு வரலாம். ஆனால் அவை அனைத்திலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியப்பாட்டுடன் முன்மொழியப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இந்த நாட்டை எந்த வழியிலும் முன்னேற்ற முடியாது. கடந்த ஜனாதிபதித் தேர்தல்களின் போது மகிந்த ராஜபக்ஷ மகிந்த சிந்தனை என்பதை தனது தேர்தல் விஞ்ஞாபனமாக முன் மொழிந்தார்.

ஆனால் மகிந்த சிந்தனையின் செயலாக்கம் அனேக விடயங்களில் அரையும் குறையுமாக அவலப்பட்டுக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. எனவே வீறாப்புடன் அபிவிருத்தி செய்வதை விட நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் என்பவற்றின் ஊடாக இனத்துவ ஒற்றுமையின் கீழ் சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்புவதே சாத்தியமானதும் தேவையானதுமாகும்.

ஆகையால் மைத்திரிபால சிறிசேனவின் நூறு நாள் திட்டம் இலங்கையை புதிய தேசமாக மாற்ற வேண்டுமாயின் முதலில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்காண வேண்டும்.

# நாட்டின் உப ஜனாதிபதியைப் போல் நாமல் ராஜபக்ஷ செயற்படுகிறார்

## மகிந்தவை சுற்றி முறைகேடான ஆட்சி - ஹிருணிகா

(கொழும்பு)

இளைஞர்கள், யுவதிகளுக்கு உண்மை என்ன என்பது புரியும் எனவும், அவர்கள் குரக்கன் சால்வை மாயையில் சிக்க மாட்டார்கள் எனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இளம் மக்கள் பிரதிநிதிகளின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை அரசாங்கத்தில் இருக்கும் எவரும் விரும்பவில்லை.

சுதந்திர கட்சியிலிருந்து என்னை விலக்கி விட்டதாக கடிதம் அனுப்பியிருக்கும் மேதகு ஜனாதிபதி அவர்களே நான் கட்சியை விட்டு விலகவில்லை ஊழலும் முறைகேடுமான ஆட்சி புரியும் உங்களை விட்டும் உங்கள் பாவச் செயல்களை விட்டுமே விலகியிருக்கிறேன் என்பதை பகிரங்கமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாமல் ராஜபக்ஷ மாத்திரமே அரசாங்கத்திற்கு ஆதரவாக நாட்டில் இருக்கும் ஒரே இளம் அரசியல்வாதி. நாமல் உப ஜனாதிபதியை போல் செயற்படுகிறார். அவரை ஐயா என்று அழைக்கும் நிலைமை அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அரசியல், கலை, விளையாட்டு என அனைத்தையும் குடும்ப ஆட்சிக்கு உட்படுத்தியுள்ளனர். அதிகாரிகள் வெறும் பொம்மைகள் மாத்திரமே.

இந்த நிலைமையை மாற்றியமைத்து சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பொது வேட்பாளருடன் இணையுமாறு நான் இளைஞர்கள், யுவதிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றேன் என ஹிருணிகா பிரேமச்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

இளம் அரசியல்வாதிகளான முன்னாள் அமைச்சர் துமிந்த சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவரதன, ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்ணான்டோ ஆகியோரும் இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர். (செ-11)

## மகாபாரத சொற்பொழிவு


(யாழ்ப்பாணம்)

மகாபாரதம் தொடர் சொற்பொழிவு நிகழ்வு வேதாந்தமடம், சைவமகாசபை, அன்புலகம் ஆகியவற்றின் அனுசரணையில் நடைபெற்று வருகின்றது.

திருமதி அஜீஸ்குமார் வாசுகி தலைமையில் சொற்பொழிவாளர் நமசிவாயம் புலேந்திரன் உரை யாழ்.கந்தர்மடம் வேதாந்தமடத்தில் மாலை 5.45 மணி தொடக்கம் 7.45 மணிவரை இடம்பெற்று வருகின்றது.

இதன்படி நாளை 22ஆம் திகதி திங்கட்கிழமை அக்ஞாதவாசம், 23ஆம் திகதி சமாதான தூது, 24ஆம் திகதி ஏன்போர் மூண்டது?, 25ஆம் திகதி தர்மம் வென்றது ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.(செ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### நல்லூரான் திருவடி

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி -கிளியே!
கலங்காத வீரனெடி.
சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

## "நல்ல தலைவரை எதிர்பார்த்து செய்யவேண்டிய பல ஆயத்தங்களைச் செய்வோம்"

இன்று திருவருகைக்காலத்தின் நான்காவது ஞாயிறாகும். இன்று நமககுத்தரப்படும் பைபிள்பகுதி லூக்கா 1:26-38 நற்செய்தியிலிருந்து தரப்படுகின்றது. இயேசு பிறப்பு விழாவை எதிர்பார்த்து காத்திருக்கும் இறுதி ஞாயிறு இயேசுவின் திருவருகையை உலகம் எதிர்நோக்கிக் காத்திருக்கும் காலத்தை நினைவுகூரும் தினமாகும். மண்ணுலக வழிகளில் ஏமார்ந்த அன்றைய மக்கள் மெசியாவின் வருகையை எதிர்பார்த்தனர். அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் இயேசுவின் பிறப்பில் நிறைவேறின. நம் எல்லோருக்கும் இறைமகன் இயேசு என்னும் ஓர் அற்புதமான தலைவர் கிடைத்தார். இந்த தலைவரின் வருகையை எடுத்து இயம்பும் இக்காலம் பொதுவாக மூன்று விதமான வருகைகள் பற்றி பேசுகின்றது. இயேசுவின்பிறப்பு விழாவிற்காக எம்மை


### பரமபிதா காட்டிய பாதை

ஆயத்தம்செய்யும்காலம். இரண்டாவது. இயேசு எல்லாவற்றையும் எல்லோரையும் தம்மிடம் ஈர்த்துக்கொள வரும் இரண்டாம் வருகை. அடுத்ததாக நிறைந்த அன்பின் முழு அடையாள வருகை எனலாம். இறையன்பின் எதிரொலிப்பாக இயேசுவின் வருகை உள்ளது. அவர் நேரான அன்போடும் இணையில்லாத கரிசனையோடும் மக்களை தம்மிடம் அழைக்கத் திருவுளம் கொண்டு அன்பின் அடையாளமாக வருகிறார்.

1995ஆம் ஆண்டு இலங்கை, 2ஆம் யோவான் பவுல் திருத்தந்தையின் வருகையை மகிழ்வோடு எதிர்பார்த்துக் காத்திருந்தது. உலகளாவிய விதமாக ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்டவரும் உலகெங்கும் வாழ் இளநெஞ்சங்களின் மனதுகளை கொள்ளை கொண்டவருமான இப்பாப்பரசரின் இலங்கைக்கான வரவு பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தது. ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு பின்பு பாப்பரசர் ஒருவர் மேற்கொள்ளும் வருகையாக இது அமைந்திருந்தது. இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் யோசப் வாஸ் அடிகளாரை அருளாளர் நிலைக்கு உயர்த்தும் நிகழ்வுக்காகவே திருத்தந்தை இலங்கை நாட்டிற்கு வருகை தந்திருந்தார்.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்றாலும் உலக கத்தோலிக்க தலைவரின் வருகையை மிகவிருப்போடு எதிர்பார்த்துக்காத்திருந்தது. உலகிலேயே முதல் பெண் பிரதமரும் இலங்கைப் பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரும் அவரின் மகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவும் மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருக்க இலங்கை நாடே எதிர்பார்த்திருந்த அந்த பாப்பரசரின் வருகை சிறப்புற அமைந்தது. நாட்டில் தாயின் ஆட்சியும் சேயின் ஆட்சியும் இருந்த போதே திருத்தந்தையர்கள் வந்திருந்தார்கள். இம்முறையும் அவ்வாறுதான் நடக்கும்வேளை திருத்தந்தை பிரான்சிஸின் வருகையும் அமையப்போகிறதோ? எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

மனித வாழ்க்கையில் எதிர்பாத்துக் காத்திருக்கும் அனுபவம் ஒரு மகிழ்வான - நம்பிக்கையைத் தருகின்ற வாழ்வின் மதிப்பிடுகளை அதிகரிக்கின்ற சிறப்பான அனுபவமாகும். எமது நெஞ்சிற்கு நெருக்கமான ஒருவர் தூர இடத்திலிருந்து எம்மை சந்திக்க வருகிறார் என்றால் நாம் மிகுந்த மகிழ்வடைகின்றோம். அந்த மகிழ்ச்சியை முழுமையாக்க வருகின்ற அவரது மனதை மகிழ்விக்க பல ஒழுங்குகளையும் திட்டங்களையும் மேற்கொண்டு அந்த வருகையை மறக்கமுடியாத ஒரு மகிழ்வான வருகையாகவும் திரும்பத் திரும்ப நினைவுகூர விரும்புகின்ற ஒரு சிறப்பான அனுபவமாகவும் ஆக்கிவிடுகிறோம். இதேபோல மனித வாழ்க்கையில் பல நிகழ்வுகளை எதிர்நோக்கி காத்திருக்கிறோம்.



பல நம் வாழ்வு சார்ந்த எதிர்பார்ப்புக்கள் இயேசு பிறப்பு காலத்தில் எமது வாழ்க்கையில் வந்து குவிந்து விடுகின்றன.

இயேசுவின் வருகைக்காக ஆயத்தம் செய்யும் காலமும் நாம் மேலே பார்த்த பாப்பரசரின் வருகைக்கு ஆயத்தம் செய்யும் காலம் போன்றது எனலாம். இக்காலம் ஒரு சந்திப்பின் காலம்.

இறைமனித சந்திப்பை அனுபவரீதியாக உணருகிற காலம். இந்த சந்திப்பை எதிர் நோக்கிக் காத்திருக்கும் போது நாம் செய்ய வேண்டிய பல ஆயத்தங்கள் உண்டு. அந்த

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

ஆயத்தங்களை மேற்கொள்ளும் காலமே இக்காலம். ஆண்டவர் இயேசுவின் பிறப்புக்கு ஆயத்தம் செய்கின்ற காலத்தில் நாம் செய்யவேண்டியவற்றை தெளிவாக அறிந்து உரிய விதமாக செய்துமுடிப்பது இக்காலத்தில் முக்கிய பணியாகும்.

இந்த சந்திப்பின் காலத்தில் நம்பிக்கை தரக்கூடிய ஏதாவது ஒரு பணியை நாம் ஆற்றுவோமாக இருந்தால் அது எமக்கும் பிறருக்கும் மகிழ்வை தரும் ஒரு அனுபவமாக இருக்கமுடியும்.

தற்போதைய தேர்தல் கால குழப்பங்களினால் வாழ்வின் கடின பாதைகளில் நடந்துகொண்டிருக்கும் ஒரு மனிதரையாவது சந்தித்து அவருக்கு எம்மால் இயன்ற ஒரு சிறிய உதவியை இந்த ஆயத்த காலத்தில் தியானித்து திட்டமிட்டு ஆண்டவரின் பிறப்பு விழாக் காலத்தில் நிகழ்த்தி முடிப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்

யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

BBC 12வது வருடத்தில்

பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

கற்பித்தல் மொழி

ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

சிறாரகளின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet
* English Day Concert
* முத்தமிழ் விழா
* Art & Craft Exhibition
* Carols
* Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்

NEW SYLLABUS

* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System

எமது கற்பத்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்

*கடந்த 11 ஆண்டுகளாக எமது 11 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்

*Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC யின் 11 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் | வடமராட்சி | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சுபாரத்தினம் வீதி, சுன்னாகம். | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | 1வது மைல்கல் , இராச வீதி, நீர்வேலி. |

British BUSINESS COLLEGE
Where Students Come First

BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

| சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|
| சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிகர வைரவர் கோவிலடி | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முன்பாக) |


Tel: 077 362 7055, 021 222 4060

B B C Early Learning Extra Curricular Activities




British Business College Contact : 077 3627055 /021 2224060


# மரண அறிவித்தல்



**அமரர் ஆசீர்வதம் இம்மனுவல் தெய்வேந்திரம் (குத்தகை)**

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் இம்மனுவல் தெய்வேந்திரம் (குத்தகை) நேற்று (20.12.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் திரேசம்மா தம்பதியினரின் அன்பு மகனும்காலஞ்சென்ற தம்பிநாயகம், விக்ரோறியா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவனும், டயானா, எட்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், நெலின், சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராசாத்தி, பச்சைக்கிளி, ராசா, காலஞ்சென்ற யோகம் மற்றும் லூசியா, ரவீந்திரன், காலஞ்சென்ற வவிவாஸ் மற்றும் றதி, குமார், கொன்சி, சின்னவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருணா, பரினா, ஜசன், மெரினா, மிலிசன், திலிபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஐசு, செறா, அஜிஸ், செடோனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை (22.12.2014) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 7/6 மத்தியகிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் நாடு...

பக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம்கல்முனை கடற்கரைப் பள்ளி முன்பாக நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அந்த இருண்ட 30 வருட கால யுத்தத்தை என்னால் முடிவுக்கு கொண்டுவர முடிந்தது. தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு செல்ல முடியாதிருந்த அந்த யுகத்தை மாற்றி இன்று நீங்கள் எல்லோரும் சுதந்திரமாக பள்ளிக்கு செல்கின்றீர்கள். அன்று பள்ளிக்கு செல்ல நின்மதியில்லை. பாடசாலைக்கு பிள்ளைகள் செல்ல முடியாது அந்த இருண்ட யுகத்தை முறியடித்து. உங்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளேன். காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தவர்களை சுட்டுக் கொலை செய்ததை ஒரு நாளும் மறக்க முடியாது. அந்த இருண்ட யுகத்தை நீக்கி சுதந்திரம், நின்மதியைப் பெற்று தந்தேன்.

எந்த ஆதரவினையும் எதிர்பார்க்காமலே மக்களுக்காக பெருந்தொகை நிதியை ஒதுக்கினேன் ஆனால்பொய்பிரசுரம்மேற்கொள்ளப்படுகின்றன.

இன வாதம், மத வாதம் பேசி நாட்டில் குழப்பம் விளைவிக்க சிலர் முயற்சி செய்கின்றனர். இதனை மக்கள் நம்ப வேண்டாம். மக்களுக்கு சுதந்திரம் அமைதியைப் பெற்றுக் கொடுத்ததற்காக என்னை ஜெனிவாவுக்கு கொண்டு போக சதி செய்கின்றனர். ஆனாலும் எனது நீதி நியாயமான நடவடிக்கைக்காக இஸ்லாமிய நேச நாடுகளே எனக்கு ஆதரவாக வாய் திறந்து குரல் எழுப்பியதை என்னால்மறக்க முடியாது. எனவே அனைவருமபாதுகாப்பான சூழலில் வாழ எல்லோரும் ஒன்று படுவோம் என அவர் அங்கு தெரிவித்தார். (செ-11)

# ஜனவரி 8...

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவிற்கும ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று மாலை எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனவரி 8-ம்திகதி கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கான பாதுகாப்பு தொடர்பாகவே இந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.

இரு மேஜர்ஜெனரல் தர அதிகாரிகளும், பிரிகேடியர் மற்றும் கேர்ணல்தர அதிகாரிகள பலரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டதாக தெரியவருகின்றது.

ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் உத்தரவிணபெயரில் செயற்படும் குண்டர்கள் சிலரால எதிர்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தாக்கப்படுவது அதிகரித்துள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று மிக மோசமான வன்முறைகள் இடம்பெறலாம், என எதிர்கட்சி அச்சமடைந்துள்ளது. இதன் காரணமாக தனது உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளது என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-11)

# இரு கப்பல்...

சொந்தமான கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ரோந்துக் கப்பலை மொரிசியசுக்கு அளிக்கும் நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத் துறை துணை அமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங், இரண்டு ரோந்துக் கப்பல்களை இந்தியாவிடம் இருந்து விலைக்கு வாங்க இலங்கை கோரியுள்ளதாகவும், அந்தக் கப்பல்கள் கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இக்கப்பல்கள் முழுமையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாகவும், இதற்கு அந்நிய நாடுகளின் ஒப்புதல் ஏதும் தேவையில்லை என்றும் மத்திய அமைச்சர் கூறியுள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு, தொழில்நுட்பத்தைப் பெற்று நவீன ஆயுதங்களை இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறிவருகிறார்.

மேக் இன் இந்தியா என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, ஹெலிகொப்டர்கள் உள்ளிட்ட சில ஆயுதங்களுக்கு ஏற்கெனவே விடப்பட்ட டெண்டர்கள் தற்போது மாற்றப்பட்டுள்ளன.

இருந்தும் ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்பது அரசியல் ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சவாலான காரியமாக இருக்கும் என்று நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட அர்யூன் டாங்கி, இலகுரக போர் விமானம் போன்ற உள்நாட்டுத் தயாரிப்புகள் இந்தியாவிலேயே இன்னும் படையில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# யாழில் வாக்...

மாவட்டத்தின் பாதுகாப்புக்கள் என்பன தொடர்பில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் உயர்மட்டக் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மதியம் இடம் பெற்றது.

ஜனாதிபதித் தேர்தல் யாழ்.மாவட்டத்தில் 4லட்சத்து 50ஆயிரத்து 132பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருப்பதாகவும், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு தெரிவிப்பதற்கு 5 முறைப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஆயுத முனை...

ங்களிலுமிருந்து மதில் பாய்ந்து வந்த முகமூடி அணிந்த 8 கொள்ளையர்கள் உரிமையாளரை சூழ்ந்துள்ளனர்.

உரிமையாளரின் கை, கால் என்பவற்றினை கட்டி வைத்து ஆயுத முனையில் அச்சுறுத்தி சுமார் 3 மணித்தியாலங்கள் வைத்திருந்தனர்.

அதேசமயம் குறித்த வீடு தொடர்பில் அயலவர் ஒருவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

உடனடியாகப் புறப்பட்ட யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற வீட்டினை நெருங்கியுள்ளனர். பொலிஸார் வருவதனை அவதானித்த கொள்ளையர்கள் குழு கொள்ளைக்கு பயன்படுத்தி வந்த எப்.சட் வகையான நீல நிற மோட்டார் சைக்கிளினை அங்கேயே விட்டு விட்டு பின்புறமாக தப்பி ஓடியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# பொது எதிர...

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரசிங்க அந்த இடத்திற்கு செல்வதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஐக்கிய தேசியக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர் செனரத் ஜயசூரிய உட்பட 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவும் ஹரின் பெர்னான்டோ குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்திற்கு பதிவாகியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிகை 280 ஆக உயர்ந்துள்ளது.

இவற்றுள் பாரதூரமான 29 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்கும் பிரிவு தெரிவிக்கின்றது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான 39 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அரச சொத்துகளின் பயன்பாடு தொடர்பில் 20 முறைப்பாடுகளும், அரச ஊழியர்களை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் குறித்து 40 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-11)

# பாரதி...

ரிலுள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது. இந்த நிகழ்வில்இந்தியத்துணைத்துதரக பிரதித் தூதுவர் எஸ்.டி. மூர்த்தி, இலங்கை தமிழரசுக்கு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (செ-11)

# துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

ஹிக்கடுவ, பத்தன பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாலை 5 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த 35 வயதான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துள்ளார்.

ஹிக்கடுவ பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (செ-11)


## விற்பனைக்கு

டோமன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு

தொடர்பு:

**0752040446**

(8828)

## கட்டடம் வாடகைக்கு

யாழ்.பிரதான வீதிக்கு கிட்ட அலுவலகம்/வீட்டுக்கு கட்டடம் வாடகைக்கு உண்டு. முற்பணம் தேவை

தொடர்பு:

**0714408794, 0714797357**

(8827)

பணிப்பெண்

## தேவை

யாழ்.நகரில் நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

**0773611282**

(8819)

## விற்பனைக்கு

இல.09, அன்னசத்திர வீதி, யாழ்ப்பாணத்தில்

சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

(வாகன தரிப்பிட வசதியும் உண்டு)

தொடர்புகளுக்கு

**0777302066**

(8824)

## தொழில்வாய்ப்பு

தொடர்புகளுக்கு: 0776838231/ 0771116770

077 111 6770 நம்பிக்கையோடு வாருங்கள். உங்களுக்கு வெற்றி நிச்சயம். பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளான ஜேம்/டொபி/பிஸ்கட்/ பால்மா/டயர்/சிம்காட்/கிளவுஸ்/பிளாஸ்ரிக்... போன்றவற்றுக்கு **உற்பத்தி/ லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல்/களஞ்சியப்பிரிவுகளுக்கு** 18-50 வயது ஆண்பெண் தேவைசம்பளம் 20,000/= 38,000/=+ வருகை அன்றே வேலை. நண்பர்கள், குழுக்கள் விரும்பத்தக்கது. இவ்வருடம் O/L, A/L பரீட்சை எழுதியவர்களும் இணைந்து கொள்ளலாம். (வவுனியா, யாழ்ப்பாணம் பிரதேசங்களில் Salesman, Field Officer, Clerk, Cash Collection போன்ற பல வேலைகளை பெற்றிடலாம்.

## கேன் புற்றுநோயாளர் காப்பகம்

கேன் புற்றுநோயாளர் காப்பகத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடமைகளை சேவைமனப்பான்மையுடன் மேற்கொள்ளக்கூடிய உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**எதிர்பார்க்கும் கடமைகளாவன**

- காவலாளிக்குரிய கடமை
- தோட்ட பராமரிப்பு வேலைகள்
- நோயாளிகளுக்கு உதவுதல்

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப்படிவத்தை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணபப்படிவத்தில் தங்களின் முழுப்பெயர், தற்போதைய முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் மேற்க்குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் தொடர்பான முன்னைய அனுபவம் கல்வித்தகைமை போன்ற விபரங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : - 31.12.2014

இந்தப் பதவிக்கு தகுதி உடைய தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்

தலைவர்,
கேன் புற்று நோயாளர் காப்பகம்,
இல.05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.

(சி-9417)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 2217603

021 567 1532

## அம்பிகை புத்தக நிலையம்

**பாலர் முதல் பாடசாலை உயர்வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய உதயமாகியுள்ளது.**

2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப்பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி-9431)

## அம்பிகை புத்தக நிலையம்

246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திர சந்திக்கு அருகாமையில்) (கொட்டடிப்பக்கம்)

தொடர்புகளுக்கு :

021 - 561 9294, 077 8875357, 077 8349507


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிந்த நிலையில்...

23) என்ற இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் எரிக்கப்பட்டு உருக் குலைந்த நிலையில் மீட்கப்பட்டு, தற்போது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மானிப்பாய் பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-11)

## அமெரிக்கா, இந்தியா...

ளுமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோர் இந்த ராஜதந்திர வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

புதுடெல்லியில் இருந்து கிடைத்த செய்தியை இந்திய உயர்ஸ்தானிகர் அரசாங்கத்தின் உயர் மட்டத்திற்கு அறிய தந்துள்ளார். அமெரிக்க அரசின் செய்தியை அந்த நாட்டு தூதுவர் அரசாங்கத்தின் உயர செயலாளர் ஒருவரிடம் வழங்கியுள்ளார்.

குறிப்பாக வடக்கு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்க அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ராஜதந்திர தரப்புகள் தெரிவிக்கின்றன. நட்புறவு ரீதியான ராஜதந்திர செய்தியாக இந்நாடுகள் தமது இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளன. (செ-11)


**Personal Class-கணினி**

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC

**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

JANUARY BATCH
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 24-01-15
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 23-01-15

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-

(சி-9429)

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 6 தொடக்கம் O/Lவரை கணிதமும் 10-ம், 11-ம் வகுப்பிற்கான வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். O/L மாணவருக்கு கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள் பல பயிற்சியாக செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:-0773501726
(8826)

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல475 கே.கே.எஸ்வீதி யாழ்ப்பாணம்
(வண்ணார் பண்ணை சிவன்கோவிலடி)

A/L 2017 தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம் 23.12.2014 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு

22.12.2014 திங்கட்கிழமை முதல் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புக்கு: 077 24 87 77 4

A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

(8829)

**சுந்தர்சன் நிறுவனத்தில்**

நீண்டகாலமாக பணிபுரியும் ஊழியர்களில் சுழற்சி முறையில் கௌரவிக்கப்பட்ட ஊழியர்கள்

திரு. V. கஜேந்திரன்
திரு. M. ராஜேந்திரம்
திரு. J. வஸ்தவன்

(சி-9413)

**ஸ்டார் ரெஸ்ட்**
4ஆ ஆண்டு நிறைவை முன்னிட்டு
சாரங்கா இசைக்குழுவுடன் இணைந்து சிறப்பிக்கும்
STAR NIGHT
நட்சத்திர இரவு
ஆடலுடன் பாடல்

**சுந்தர்சன் நிறுவனத்தின்** மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 40 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

1 ஆம் பரிசு - Washing Machine - Dr.K. சசிகரன் - மானிப்பாய்
2 ஆம் பரிசு - 24" LED TV - பவிபழனி - இணுவில்
3 ஆம் பரிசு - Microwave Oven - நிலாந்தினி - சங்குவேலி

4 - 10 ஆம் பரிசில்கள் - Pedastal Fan
சங்கவி - உடுவில் /செல்வமணி - கொக்குவில் /தர்மதேவன் - சுழிபுரம் வாசுகி - நவாலி /ஜெயரூபன் - உடுப்பிட்டி /பாஸ்கரன் - வண்ணார்பண்ணை /பிரின்சன் - சுன்னாகம்

11 - 20 ஆம் பரிசில்கள் - Mobile Phone
ஜங்கரன் - சித்தங்கேணி /ஜெயக்குமாரி - கோண்டாவில் /செல்வராசா - சாவற்கட்டு /கிருஸ்ணபவான் - சுழிபுரம் /அகிலநாத் - மானிப்பாய் மாலினி - சுழிபுரம் /கஜேந்தினி - சங்குவேலி /சிவகுமார் - மானிப்பாய் கேதீஸ்வரநாதன் - நல்லூர் /வைகுந்தவாசன் - உரும்பிராய்

21 - 30 ஆம் பரிசில்கள் - Water Filter
செந்தமிழ்ச்செல்வன் - இளவாலை /நீகன் - பாசையூர் குமாரரூபன் - ஏழாலை /சிறீகாந் - தெல்லிப்பளை பற்றிமாபொன்ராணி - நவாலி /ஜெரஸ்ரா - மல்லாகம் குகேந்திரன் - சண்டிலிப்பாய் /பத்மினிதேவி - கொக்குவில் சுலேந்திரன் - வடலியடைப்பு /ராஜ்குமார் - யாழ்ப்பாணம் -

31 - 40 ஆம் பரிசில்கள் - Toaster
பாவேந்தன் - திருநெல்வேலி /அகிலன் - ஆனைக்கோட்டை வனஜா - மானிப்பாய் /தர்மகுலசிங்கம் - வல்வெட்டித்துறை சூரியகுமார் - சுழிபுரம் /மோகனரூபி - உடுப்பிட்டி /பிரவீனா - கோண்டாவில் /உதயசீலன் - வட்டுக்கோட்டை /சிவபாலசுந்தரம் - திருநெல்வேலி /சுகராஜா - மூளாய்

(சி-9413)

SINGER அதி விசேட கொடுப்பனவுகள்

10 வர்த்தக நாமங்களை கொண்ட 50 மாதிரிகள்
SINGER SAMSUNG HITACHI SHARP PHILIPS SONY TCL GRUNDIG UNIC Skyworth

வட்டி இல்லா கொடுப்பனவு மற்றும் ரூ.4000/- பரிசு கூப்பன்

கடன் அட்டைகளுக்கு 24 மாதங்கள் வரை 0% வட்டி

மாற்றீடு கழிவு ரூ.55,000/- வரை

80" மாற்றீடு கழிவு ரூ.250,000/- SHARP AQUOS
65" மாற்றீடு கழிவு ரூ.150,000/- SAMSUNG UHD Curved LED
48" மாற்றீடு கழிவு ரூ.70,000/- SAMSUNG Curved LED
47" மாற்றீடு கழிவு ரூ.50,000/- SINGER 3D LED SLE47E66SW விசேட விலை ரூ. 136,799/-
32" SAMSUNG SMGUA32H4100 வட்டி இல்லா விலை ரூ. 64,999/- மாதாந்த கட்டணம் ரூ. 4,461/- வட்டி இல்லை DVD இலவசம்

வட்டி இல்லா கொடுப்பனவு மற்றும் பரிசு கூப்பன்

32" SINGER விலை ரூ. 53,899/- மாதாந்த கட்டணம் ரூ. 4,146/- வட்டி இல்லை
32" GRUNDIG விலை ரூ. 54,499/- மாதாந்த கட்டணம் ரூ. 4,192/- வட்டி இல்லை
28" SINGER SLE28T3520 விலை ரூ. 41,499/- மாதாந்த கட்டணம் ரூ. 2,964/- வட்டி இல்லை
24" SINGER SLE24F518A விலை ரூ. 36,099/- மாதாந்த கட்டணம் ரூ. 2,579/- வட்டி இல்லை

இக்கொடுப்பனவு 2014 டிசெம்பர் 31 வரை மட்டுமே. நிபந்தனைகளுக்குட்பட்டது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 021-2225408 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கொடிகாமம் | 077-6433888 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021 2240 555 | மானிப்பாய் | 021 5100 280 | கிளிநொச்சி | 021-2280199 |
| பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | 011 5 400 400 | http://www.singersl.com | | |

கிடைக்குமிடங்கள் SINGER Plus Approved Dealers


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org